அருளோசை

திருவள்ளுவர்
ஆண்டு 2005
ஐப்பசி
1974 அக்டோபர்



கலைமகள்

கணேசன்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600 018

ஆண்டுச் சந்தா ரூ. 5]

[தொலைபேசி : 76828

கலைமகள் புகழ்ப்பாக்கள்

—:o:—

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே!

—சகலகலாவல்லி மாலை

வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்கமலம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு விளரி பாடக்
கண்மலரும் ஆயிரந்தோடு + அவிழ்த்து முகை
நெகிழ்த்த கமலத்தில் வாழ்எண்
கண்மலரும் சதுர்முகத்தோன் நாவில்வளர்
வாணிபதம் கருத்துள் வைப்பாம்.

— மச்சபுராணம்

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து +
இருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்தபேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

— வில்லிபாரதம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்! என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள்! இங்கு வாராது + இடர்.

மயிலே! மடப்பிடியே! கொடியே! இளமான் பிணையே!
குயிலே! பசுங்கிளியே! அன்னமே! மனக்கூரிருட்கோர்
வெயிலே! நிலவெழு மேனிமின்னே! இனிவேறுதவம்
பயிலேன்! மகிழ்ந்து பணிவேன், உனது பொற் பாதங்களே!

—சரசுவதியந்தாதி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த ஐப்பசி 1974 அக்டோபர்	ஓசை 4

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

'அருளோசை' தங்களுடைய அன்பான ஆதரவால் மூன்றும் ஆண்டில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இம்மாத வினு விடைப் பகுதிக்கு, விடை எழுதியவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. இது எங்களுக்கு மன நிறைவு தருவதாக உள்ளது. மேலும் பல அன்பர்கள் எழுத வேண்டும் என்று விரும்புகின்றோம். "பரிசு கிடைக்கவில்லை" என்ற ஏமாற்றத்தைத் தவிர்த்து, சமய அறிவு பெறுவதற்காகவே எழுதுகிறோம் என்ற நல்ல குறிக்கோளுடன் அன்புகூர்ந்து விடை எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கேட்கப்படும் வினுக்களுக்குத் தகுந்த விடைகளைக் கண்டு பிடிக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் படிக்கும்போது, நம்மையறியாமல் நாம் ஆழ்ந்த கவனத்துடன் படிப்போம்; தக்கவிடையைக் கண்டு பிடித்து ஒருமுறை எழுதுவது பலமுறை படித்ததற்குச் சமமாகும். எனவே இன்னும் திரளான அன்பர்கள் விடை எழுதியனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதத்தில் கலைமகள் விழா வருகிறது. அன்பர்கள் சிறப்பான முறையில் வழிபாடுகள் நிகழ்த்துவீர்கள் என நம்புகிறேன். கலைமகள் விழாவை யொட்டி இவ்விதழ் அட்டையில் 'கலைமகள்' படமும், கலைமகள் புகழ்ப்பாக்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

" அருளோசை "

வினா விடைப் பகுதி-செப்டெம்பர்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : செல்வி. பி. தங்கம், காஞ்சிபுரம்-3, செங்கற்பட்டு மாவட்டம், சந்தா எண். 3016.

இரண்டாம் பரிசு: திரு. எஸ். சுந்தரம், வெண்பாவூர், திருச்சி மாவட்டம், சந்தா எண். 3052.

மூன்றாம் பரிசு : செல்வி. வே. பரமேசுவரி, சென்னை-18, சந்தா எண். 3022.

நான்காம் பரிசு : திரு. எஸ். நாகராஜன், தேனாம்படுகை, தஞ்சை மாவட்டம், சந்தா எண். 2881.



நல்வாழ்த்துக்கள் !

திருவளர் செல்வ, சென்ற பல கடிதங்களில் விளக்கிய வகையில் பௌத்த மதத்திற்கு 'உயிர் உண்டு' என்ற கொள்கை இல்லை என்பதை அறிந்திருப்பாய். 'உயிர் இல்லை' என்ற கொள்கை உறுதிப்படுமானால் மதங்கள் ஏன்? நோன்புகள் ஏன் என்ற கேள்விகள் எழுகின்றன. ஏன்? ஏன்? ஒழுக்க நெறிகள் கூட அவசியம்தானா? என்ற கேள்வியும் எழுகிறது. ஒழுக்க நெறிகள் உயிர்களை உயர்த்துவன. உய்யும் நெறியில் செலுத்துவன. உயிர்களே இல்லையென்றால் இவை தேவையில்லாதவைதாமே! ஏன்? பௌத்த மதத்தினர் கூறும் நிர்வாணம் யாருக்கு? உயிர்க்கா? சதைப்பிண்டமாகிய உடலுக்கா? என்பனபோன்ற வினாக்களுக்கு இதுவரையில் விடை கிடைக்கவில்லை. ஆனால் பௌத்த மதத்தினர் 'உயிர் உண்டு' என்ற கொள்கையுடையவர்களை நோக்கி 'நிலையான உயிர் உண்டு என்று சொன்னாலும் இந்த வினாக்கள் எழத்தானே செய்கின்றன!' என்று கேட்கின்றனர். இந்தக் கேள்வியில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால். இந்தக் கேள்வி வேதாந்திகளுக்கே அறச்சங்கடத்தை ஏற்படுத்தும். வேதாந்திகள் தாம் எதனாலும் பாதிக்கப்படாத-சலனமற்ற ஒரு மூலப்பொருளாக உயிரைக் கொள்வர். நிலையான-சலனமற்ற பொருள் உயிர் என்று சொன்னால் முன்னேற்றம் ஏது? ஆதலால், பௌத்த மதத்தைப் போலவே, உயிர்க் கொள்கையில் வேதாந்தமும் வளர்ந்த கொள்கையல்ல.

திருவளர் செல்வ, இந்து சமயம் என்ற பொதுநெறி "புறத்தே பொருள் உண்டு; உயிர் உண்டு" என்று கூறுகின்றது. பௌத்தம் "புறத்தே பொருள் இல்லை; உயிர் இல்லை" என்று கூறுகிறது. ஆனால், பௌத்தம் "உயிர் இல்லை" என்று கூறும் கொள்கையில் கால்ஊன்றி நிற்கிறதா என்பதே கேள்வி. எழுத்தால், சொல்லால் பௌத்தம் "உயிர் இல்லை" என்று சொன்னாலும் அதன் உணர்வுகள் அப்படி இல்லை என்று சிலர் கருதுகின்றனர். பௌத்தர் கர்மம், மறு பிறப்பு, வீடுபேறு ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும்பொழுது

உயிர் இல்லையென்று எப்படிக் கூறமுடியும்? பிறப்பு இருந்தால் தானே மறுபிறப்பு! அதுவும் உயிர் பிறந்தால்தானே! ஒரே வழி பிண்டம் வெளிவரும்போது, பிண்டம் பிறந்திருக்கிறது என்றுகூடச் சொல்வாரில்லையே! பௌத்தர் கூறும் நிர்வாணம் உயிரைப்பற்றியதா? உடலைப்பற்றியதா? உடல்நிர்வாணம் குடிகாரர்களுக்கும், பைத்தியக்காரர்களுக்கும்கூட உண்டே! ஆனால், இந்தியாவில் தோன்றிய பௌத்த மதத்தை தொடக்க காலத்தில் இந்து சமயம் எதிர்த்து வெளியேபோகச் செய்திருந்தாலும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட படிப்பினையின் விளைவாக இந்து சமயம்-குறிப்பாக வேதாந்த சமயம் பௌத்தத்தோடு சமாதானம் செய்துகொள்ள மிகவும் விரும்பி உடன்பட்டு பௌத்த சமயத்தில் இல்லனவும், உள்ளனவும் ஆகியவற்றில் உடன்பாடேற்றித் தழுவ முயற்சிசெய்தது. அதாவது, இறுதிநிலையில் பலவற்றையும் கடந்த பரிபூரணம் உண்டு என்பதில் பௌத்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் ஒற்றுமை ஏற்படுத்த முயற்சி செய்கின்றது. வேதாந்தம், "பரமான்மா மட்டுமே உண்டு; உயிர்கள் தோற்றம் அளவே; பொருள்கள் யாவும் நிலையில்லாதன; பரிபூரணப்பொருள் மட்டுமே நிலையானது" என்று கூறுகிறது. ஆனால், "நிலையில்லாதன" என்ற கொள்கையும் "இல்லை" என்ற கொள்கையும் ஒன்றாகா. இங்ஙனம் பௌத்தமதம் "உயிர் உண்டா? இல்லையா"? என்ற கொள்கையில் மற்றவர்கள் ஆராயும் அளவுக்கு விவாதங்களில் ஈடுபடுவதில்லை. பௌத்த மதத்தைக் கண்ட புத்தர், உயிர் பற்றி என்னகூறினர் என்பது இன்னமும் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், அவரைச் சார்ந்தோர் தத்தம் மனப்போக்கில் கூறிக்கொண்டிருக்கின்றனர். அதனாலேயே பௌத்த மதத்தில் பல உட்பிரிவுகள் தோன்றின. ' புத்தர், தம்மதத்தைத் தத்துவரீதியாக நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சியைவிட மோனத்தில் ஆழ்ந்து அமைதி காண்பதிலேயே அவருடைய நாட்டம் இருந்தது. அதனால், அவர் விவாதங்களில் ஈடுபாடு காட்டவில்லை என்பதுதான் உண்மை. பொதுவாகத் தத்துவவிளக்கம் என்பது அவரவர் அனுபவத்தின் வழிப்பட்டனவேதவிர, யாரோ சொல்ல யாரோ எடுத்துக்கொள்வதல்ல. அதுமட்டுமின்றித் தத்துவங்களைப்பற்றி ஆழமாக ஆராய்தல் துன்பநீக்கத்திற்குத் துணைசெய்யாது. தத்துவங்களை எண்ணித் தலையிலடித்துக்கொள்ள வேண்டாமென அனுபூதிச் செல்வர்கள் அருளியிருக்கின்றனர். தத்துவ விசாரணை துன்பநீக்கத்திற்கு வழியன்று என்பதும், அமைதி நிலையே துன்ப நீக்கத்திற்கு உரியவழி; தூய்மைபெறவழி" என்பதும் புத்தர் வாக்கு. அடுத்த கடிதத்தில் மேலும் எழுதுவோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இன்ப அன்புடன்,



ஆள்வினை

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

உலகம், தொழில் வயப்பட்டது. இயற்கை உலகம் ஓயாது தொழிற்படுகிறது. தொழிற்பாட்டில்தான் ஐம்பூதங்கள் இயங்குகின்றன. வளி சுற்றுகிறது; வான் மழை பொழிகிறது; நிலம் வளம் கொழிக்கிறது. உலகிற்கு உழைக்கும் உயிரின்றி இயக்கம் இல்லை. உயிரினங்களில் மூத்தவனாகிய மனிதன் மற்ற உயிரினங்களைவிட அதிகமாகவே உழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். ஆனால், நடைமுறையில் அப்படி இல்லை. நாளைய உணவுக்குச் சேர்த்து வைக்கும் குணத்திலிருந்து சொத்துடைமை உணர்வு பெருகி உடைமைவர்க்கம் ஏற்பட்டமையின்காரணமாக, உடைமையற்றோர் உழைத்தலும் உடைமையுடையோர் உடைமையற்றோர் உழைப்பிலிருந்து வாழ்தலுமாகிய சூழ்நிலை சமுதாய அமைப்பில் தோன்றிவிட்டது. அதற்குப் பிறகு உழைப்பது உயிரின் இயல்பு என்ற கொள்கை மாறி உழைக்காமலே உண்பது பெருமைக்குரியது என்ற கொள்கை தோன்றிற்று. உடன் உடைமைவர்க்கத்தோடு இயல்பாகத் தழுவிக் கொள்ளும் இயல்புடைய-பிழைப்பு வழிப்பட்ட மதப் புரோகிதர்கள் உழைக்காமல் உண்பது புண்ணியத்தின் பயன் என்றும், உழைப்பது பாபத்தின் பயன் என்றும் உடைமை வர்க்கத்திற்குச் சாதகமாகப் பிரசாரம் செய்தனர். அதுமட்டுமா? உழைப்பின் பயனை உழைப்பவன் அடையமுடியாதபொழுது அல்லது அடைவதற்குத் தடையாக உடைமை வர்க்கம் நின்றபொழுது இதே புரோகிதவர்க்கம் "அவ்வளவுதான் கொடுத்துவைத்தது; தெய்வம் அனுமதித்த கூலி கிடைத்திருக்கிறது" என்றெல்லாம் பிரசாரம் செய்து உபதேசித்துச் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்கள் ஆகவும் ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகவும் செய்தனர். ஆனால், உண்மையான சமயம் இதை ஏற்றுக்கொள்வதில்லை.

உண்மையான மெய்ந்நெறி காட்டிய திருவள்ளுவர் ஆள்வினையை உயிரின் இயல்பான உடைமை என்கிறார். ஆள்வினையுடையாருக்கு அருமையுடையதில்லை. தெய்வம் என்பது மனிதர்களை அவரவர் வினை

வழி வழி நடத்துதல் என்பதேயாகும். ஆனால், மனிதனின் வாழ்க்கையில் தெய்வத்திற்கு எதேச்சாதிகாரமான ஆளுமை இல்லை. அஃதொரு நியதி நேற்றைய தீவினையை இன்று அறிந்து நினைந்து வருந்தி மாற்றிக் கொண்டு நல்வினை செய்யப் பெறுமானால் தீவினையை வெற்றி காணலாம். அதற்குத் தேவை முயற்சியே! நேற்றைய தவற்றை இன்றைய முயற்சியால் திருத்திக் கொள்ளத்தானே வாழ்க்கை! மண் திருத்தப்பெற்று சோலைகளாவதைக் காண்கின்றோம். மனம் திருந்தினால் மாண்புகள் சேராவோ? உடலின் பளபளப்பைவிட உழைப்பின் வடுக்கள் தேவதைகள் கண்டு மகிழும் காணிக்கைகளாகும். உழைப்புக்குணம் என்பது நல்ல-வளர்ந்த-ஆரோக்கியமான ஓர் உயிரின் குணமாகும். அதனாலன்றோ பாரதி, "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்றான். பொதுமையுலகு கண்ட மாமுனிவர் மார்க்ஸ் "உழைக்காதவனுக்கு உண்ணும் உரிமையில்லை" என்று கூறினார். உழைப்பு என்ற அச்சிலேயே உலகம் இயங்குகிறது. மனிதன் அறிந்து அனுபவிக்கும் அனைத்துப் பொருள்களும் மனித உலகத்தைச் சார்ந்த உழைப்புவர்க்கத்தின் உழைப்பின் பெருமையைப் பண்பாடிக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கை வளர, இன்பமுற வாழ அறிவறிந்த ஆள்வினை தேவை. இதுவே வள்ளுவர் ஆணை.



திருமந்திரம் அருளிய திருமூலர்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று எங்கும் முழங்கக் கேட்கிறோம். இப்பொன்மொழியை வழங்கிய பெருமகனார் யாவர் என்பதை எல்லோரும் தெரிந்திருப்பரோ என்பது ஐயம். பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே உலக சமூக ஒருமைப்பாட்டையும் உலக சமய ஒருமைப்பாட்டையும் பறைசாற்றிய பண்பாளர் திருமூலதேவநாயனார். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்து வணங்கப்படும் அடியவர். அவர் வரலாற்றை ஒரு சிறிது அறிந்து கொள்ளல் நன்று.

திருக்கயிலாயத்தில் நந்தியெம்பெருமான் திருவருள் பெற்ற யோகி ஒருவர் தமிழகத்தில் பொதியமலையிலுள்ள அகத்திய முனிவரைக் கண்டு அவருடன் சில காலம் தங்கியிருக்க விரும்பிப் புறப்பட்டார். கேதாரம், பசுபதிநேபாளம், காசி, காளத்தி, ஆலங்காடு, கச்சிஏகம்பம் முதலிய தலங்களை வழிபட்டு திருவாவடுதுறையை அண்மினார். சாத்தனூர் என்ற இடத்தில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் என்பவன் இறந்து கிடந்தான். அவன் உடலைச்சுற்றிப் பசுக்கள் கதறி நின்றன. பேரிரக்கம் கொண்ட அப்பெரியார் கூடுவிட்டுக் கூடுபாயும் உபாயத்தால் தன் உயிரை மூலன் உடலில் பாய்ச்சி திருமூலராய் எழுந்தார். பசுக்கூட்டம் துள்ளிக்குதித்து மேய்ந்தன. மாலையில் மாடுகளை சாத்தனூரில் சேர்த்த திருமூலர் ஒரு அரச மரத்தின் கீழிருந்து யோகம் புரிந்தனர். ஆண்டு ஒன்றுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினர். இவ்வரலாறு சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறியது. இதற்கு ஆதாரமாகத் திருமூலர் திருமந்திரத்திலேயே அகச்சான்றுகள் உள்ளன.

திருமந்திரம் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் கொண்டது; 232 அதிகாரங்களையுடையது; 3047 பாடல்கள் அடங்கியது. "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்று அவரே கூறியிருப்பதால் அவர் பாடியவை 3000 பாடல்கள் தான் என்று தெரிகிறது. இந்நூலுக்கு "தமிழ் மூவாயிரம்" என்றும், "திருமந்திரமாலை" என்றும் பெயர் உண்டு.

காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் முதலிய ஒன்பது ஆகமப் பொருள்களை ஒன்பது தந்திரங்களிலும் கூறியிருக்கிருர்.

பாயிரத்தில் கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு, குருபாரம்பரியம், மூலர்வரலாறு, அவையடக்கம் முதலியவை காணப்பெறுகின்றன. முதல் தந்திரத்தில் உபதேசம், யாக்கை செல்வம் இளமை நிலையாமை, புலால் மறுத்தல் முதலியன இடம் பெற்றுள்ளன. இரண்டாம் தந்திரத்தில் அட்ட வீரட்டம், ஐந்தொழில், இலிங்கபுராணம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. மூன்ரும் தந்திரத்தில் எட்டுவகை யோகம் சொல்லப் பெறுகிறது. நாலாம் தந்திரம் மந்திர சாதனம் பற்றியது; மந்திரங்கள், சக்கரங்கள் இவற்றைப் பற்றிக் கூறுவது. ஐந்தாம் தந்திரத்தில் சைவ பேதங்கள், சரியையாதி நான்கு பாதங்கள், ஆறுசமயங்கள் முதலியன அடங்கியுள்ளன. ஆரும் தந்திரம், சிவகுருக்காட்சி, திருவடிப்பேறு, ஞானம், துறவு, தவம் இவற்றை எடுத்துரைக்கிறது. ஏழாம் தந்திரம் ஆறு ஆதாரங்கள், ஆறுஇலிங்கங்கள், சிவவழிபாடு, மகேசுவரபூசை, ஐம்புலனடக்கம், அடியார் பெருமை முதலியவற்றைக் கூறுகிறது. எட்டாம் தந்திரத்தில் உடலமைப்பு, சிவன் முதன்மை, பதி பசு பாச விளக்கம் முதலியவை பற்றிச் சொல்லப்படுகிறது. ஒன்பதாம் தந்திரத்தில் திருநடன உண்மை விளக்கம், ஐந்தெழுத்தின் சிறப்பு, அறிவு மலர்ச்சி, சமாதிநிலை முதலியன காணலாம்.

திருமூலர், தேவார மூவர்களுக்கு முந்தியவர். அடியார்களில் காலத்தால் முந்தியவர். திருமந்திரம் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றிருக்கிறது. தோத்திர நூல்களில் இடம் பெற்றிருப்பினும் சைவ சித்தாந்த சாத்திர நூல்களுக்கெல்லாம் முன்னெழுந்த சாத்திர நூல். இது மொழிபெயர்ப்பல்ல; மூலநூல். "என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே" என்று அவரே கூறுகின்ருர். இது சிவயோக ஞான அனுபவநூல். செந்தமிழும் மந்திரமொழி ஆகக்கூடும் என்பதைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாரறியச் செய்தவர் திருமூலதேவநாயனர்.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கு மடியேன்"—சுந்தரர்.

"சக்கரவர்த்தி தவராசயோகியெனும்
மிக்க திருமூலன் அருள்மேவு நாளெந்நாளோ"

—தாயுமானர்.

குறிப்பு : 30-10-74 திருமூலர் திருநட்சத்திரமாகிய ஐப்பசி அசுவினி நாளை யொட்டி இக்கட்டுரை வெளியிடப்பெறுகிறது.

உ

சிவமயம்

வள்ளலார் நெறி (க)

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவருட்பிரகாச வள்ளலார் உணர்ந்து ஒழுகியதும் உலகோர்க்கு உபதேசித்ததும் ஆகிய நெறி, திருவருட்பாவிலே ஐயத்திற்கு இடம் இல்லாவகையில் உறுதியாகப் பல பாடலிற் கூறப்பட்டுளது.

அந்நெறி ஒன்றே என்றும், அவ்வொன்றே தழைக்க வேண்டும் என்றும், அதுவே பெருநெறி என்றும், அதைத்தான் கடைப்பிடித் தொழுக வேண்டும் என்றும், அழியாத நெறி, சமரசநெறி, சன்மார்க்க நெறி, திருநெறி, சிவநெறி என்றும் உபதேசித்தருளினர்.

5586-7

அடைந்திடுமின் உலகீர் இங்கிது தருணம் கண்டீர்
அருட்சோதிப் பெரும்பதி என்னப்பன்வரு தருணம்
கடைந்த தனித்திருவமுதம் களித்தருத்தி யெனக்கே
காணாத காட்சியெலாங் காட்டுகின்ற தருணம்
இடைந்தொருசா ரலையாதீர் சுகம்எனைப் போற்பெறுவீர்
யான்வேறு நீர்வேறென்றெண்ணுகிலே னுரைத்தேன்
உடைந்த சமயக் குழிநின்றெழுந் துணர்மின் அழியா
வொருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற்றுவந்தே.

திருநெறிஒன்றே அதுதான் சமரச சன்மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனைஆட் கொண்டருளமுதம் அளித்து
வல்லபசத்திகள் எல்லாம் வழங்கிய ஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருந்தருணம் இதுவே
கருநெறி வீழ்ந்துழலாதீர் கலக்கம் அடையாதீர்
கண்மையினாற் கருத்தொருமித் துண்மையுரைத்தேனே.

தருநெறியெல்லாம் உள்வாங்குஞ் சுத்த
சன்மார்க்கம் என்றோர் தனிப் பேர்கொண் டோங்கும்
திருநெறிக்கே சென்று பாரீர்–திருச்
சிற்றம்பலத்தே திருநடசோதி. (4603)

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரசசன்மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்தியெலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகமெலாம் கண்டிடுமோருளவையறிந்திலரே
வார்ந்தகட லுலகறிய மரணமுண்டே அந்தோ
மரணமென்றாற் சடமெனுமோர் திரணமுஞ்சம்மதியா
சார்ந்திடும் அம் மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடுசிற்சபை நடத்தைத் தரிசனஞ் செய்வீரே.
(5596)

தண்மையொடு சுத்த சிவ சன்மார்க்க நெறியிற்
சார்ந்து விரைந்தேறுமினே (5588)

அளிக்கப் பெற்றது

சித்தியெலாம் எமக்களித்த சிவகதி (5590)

அளித்த பதி

அனைத்துஞ் செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதி (5591)

அதுவே தழைக்க

சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே தழைக்க, தயவறியாத்
துன்மார்க்கம் போக தொலைந்து. (5620)

அத்திருநெறி புதியதன்று, தொன்னெறியே.

அருநெறிய மறைவல்லமுனி ....
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.
திருஞானசம்பந்தர். திருநெறியாவது யாது?

"திருநெறி அருளே கண்ணுச் செல்நெறி சிவதன்மத்திற்
றருநெறி அருள் பொருந்தச் சத்தவிற்பத்தி பண்ணி
ஒருநெறியாக்கலா திங்குறு நெறியொழிந்து சைவப்
பெருநெறி பிணக்கிலாத பிரானெறிப் பின் செல்வாமே."

உமாபதி சிவம். (சிவபூசாகாரணம். 2.)

ஆளுடையபிள்ளையார் அருண்மாலை. (3226-36)

முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்
டையம்நீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்னுயிர்க் குயிரெனுங் குருவே. (3234)

திரு + நெறி + தமிழ் =

திரு—நிலையுடைய பெருஞ் செல்வம்

" நின்திருப்புகழைப் பேசுகின்றோர் மேன்மேலும்
பெருஞ் செல்வத்திற் பிறங்குவரே." (32.36)

'நிலையுடைய பெருஞ் செல்வம் நீடுலகிற் பெறலாமே.'

நெறி-அச் செல்வத்தை அடைதற்குரிய மார்க்கம்.

அம்மார்க்கம் நால்வகைப்படும். காரணம் :—உடல், பொறி, கரணம், அறியாமை எனத் தடை நான்கு.

தமிழ்—திருவருட்பா

திருநெறித் தமிழ்

ஐயம் தீர்த்ததும், தீர்ந்ததும் வள்ளலாரது சுவாநுபவமே. அவ்வநுபவத்தை முத்திறத்தில் வைத்துப் பாடியருளினர்.

(அருட்பா 3226—3531 + 5806)

1. உயிர்
2. அருள் + அநுபவம்
3. சிவம்

இவற்றை முடிவில் விளக்குவேம்.

வள்ளலார் நெறியை அவர் அருளிய அருட்பாக்களை முற்றும் ஓதியுணர்ந்து ஆய்ந்து முடிபு காண்பதே அறிவிற்குத் தக்கது. அத் தகுதியில்லாதார், திருவருட்பாக்களை மட்டும் பாடவும் திருநெறித் தமிழ் மறையைப் பாடலாகாது என்று மறுக்கவும் ஒதுக்கவும் துணிந்து இருணெறிக்காளாகின்றனர். திருவொற்றியூரிலே எம்மையும் வைத்துக் கொண்டு அவ்வாறு மறுத்தார் ஒருவர். கூட்டத்தார் அவர் கொள்கையராயே இருந்தனர்.

வள்ளலார், திருமூலதேவநாயனர் அருளியவாறே 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் வாய்மையைக் கடைப்பிடித்தொழுகியவர்.

உருவர் ஆகியும் அருவினர் ஆகியும்
  உருஅரு வினர்ஆயும்
ஒருவரே உளர்கடவுள் கண்டறிமினோ
  உலகுளீர் உணர்வின்றி
இருவர்ஆம் என்றும் மூவரே ஆம்என்றும்
  இயலும் ஐவர்கள் என்றும்
எருவராய் உரைத்துழல்வதென் உடற்குயிர்
  இரண்டுமூன் றெனலாமே? (5384)

இவ்வருட்பாவை நோக்கி, வள்ளலார்க்கு ஒருவரே கடவுள் என்னும் உறுதியுண்டு என்னும் வாய்மையை அறிதல் வேண்டும்.

அக்கடவுள் எது? பல சமயத்தில் வெவ்வேறு பெயராற் குறிக்கப் படுகின்ற கடவுள், வள்ளலார் அருட்பாட்டில் எப்பெயராற் குறிக்கப் பெறுகின்றார்? இவ்வினக்கட்கு விடை அருட்பாக்களே கூறும், கேண்மின்.

சிவமே பரம் பொருள்

வண்டணிபூங் குழலம்மை எங்கள்சிவ காம
  வல்லியொடு மணிமன்றில் வயங்கியநின் வடிவம்
கண்டவரைக் கண்டவர்தம் கால்மலர்முத் தேவர்
  கனமுடிக்கே முடிக்கின்ற கடிமலர்ஆம். என்றால்
பண்டகுநின் திருத்தொண்டர் அடிப்பெருமை எவரே
  பகர்ந்திடுவர் மறைகளெலாம் பகர்ந்திடுவான் புகுந்தே
விண்டுலர்ந்து வெளுத்த; அவை வெளுத்தமட்டோ? அவற்றை
  வியந்தோதும் வேதியரும் வெளுத்தனர் உள்ளுடம்பே.
(5386)

கிழக்கு வெளுத்தது; கருணையருட்சோதி யுதயங்
  கிடைத்ததென துளக்கமலம் கிளர்ந்ததென தகத்தே
சழக்குவெளுத்தது; சாதியாச் சிரமாசாரம்
  சமயமதாசாரம் எனச் சண்டையிட்ட கலக
வழக்குவெளுத்தது; பலவாம் பொய்ந்நூல் கற்றவர்தம்
  மனம்வெளுத்து, வாய்வெளுத்து, வாய்உற, வாதித்த
முழக்குவெளுத்தது. சிவமே பொருள் எனும் சன்மார்க்கம்
  முழுநெறியில் பரநாதமுரசு முழங்கியதே. (5387)

சிவம் ஒன்றே பொருள்

ஒன்றே சிவம்என் றுணர்ந்திவ் வுலகமெலாம்
நன்றே ஒருமையுற்று நண்ணியே—மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க இசைந்து. (5615)

அருள்மிகு பூமீஸ்வரர் தேவஸ்தானம்

மரக்காணம்,

தென்ஆர்க்காடு மாவட்டம்

கடலும் கடலைச்சார்ந்த பூமியான அருள்மிகு பூமீஸ்வரர் எழுந்தருளியுள்ள மரக்காணம், எழில்மிகு ஊராகும். இவ்வூரில் உள்ள அருள்மிகு பூமீஸ்வரர் ஆலயத்திலுள்ள இறைவன் ஊழிக்காலத்தே உலகைப் பிரளய வெள்ளத்திலிருந்து காப்பாற்றியருளிய இறைவனுக்கு நிகராக பூமீஸ்வரராகவே விளங்குகின்றார்.

எளிமையும், தனிமையும் குடிகொண்டிலங்கும் இவ்வாலயத்திலிருந்தே கடலோசையையும் செவியுறலாம். இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டுத் திரும்பும் பெருமக்கள் அருகில் உள்ள உப்பு விளைக்கும் உப்பளங்களையும் கண்டு களிபேருவகை கொள்வர்.

அண்மையில், அருள்நெறியாளர்கள் ஜி. ஆதிமூலம், துணை ஆணையாளர் அவர்களும், முருகன், உதவி ஆணையாளர் அவர்களும் ஷ ஆலயத்திற்கு வருகை தந்தருளிச் சிறப்பித்து ஆலய நிர்வாக வளர்ச்சிக்கான வழிவகைகளை ஆய்ந்தறிந்து அறிவுரை செயலாக்கம் வழங்கினர்.

பெருமக்கள் பலரும் இறையருள் கருணைக்கடலாம் அன்பரடியாரை ஆட்கொள்ளும் பூமீஸ்வரர் ஆலயத்தில் திருமணங்கள் செய்துகொண்டு வாழ்வாங்கு வாழ்கிறார்கள்.


ஆலய வழிபாட்டிற்கு வருவோர்கள் நலனும், வளமும் அடைகிறார்கள். வருக! வருக!!

இங்ஙனம்

எக்கியர் திரு. எம். இ. அப்பாதுரை, பரம்பரை அறங்காவலர்.

சி. ஈசுவரன், பி.ஏ., பி.டி., ஐ.இ. (டிப்) நிர்வாக அதிகாரி.

மரக்காணம்,
திண்டிவனம் வட்டம்,
தென்ஆர்க்காடு மாவட்டம்.



திருவுத்தரகோசமங்கை

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

திருவுத்தரகோசமங்கை என்னும் சிறந்த தலம், இராமநாதபுரத்தில் இருந்து தென்மேற்கில் 10 கல் தொலைவில் உள்ளது. இதற்கென ஒரு சிறு புகைவண்டி நிலையம் உண்டு. அதில் இருந்து நேர் தெற்கே நான்கு கல் தொலைவில் திருவுத்தரகோசமங்கைக் கோயில் சிறப்புற விளங்குகின்றது. திருப்புல்லணை, திருஇராமேஸ்வரம், திருச்சுழியல், திருவாலவாய், திருமருதூர், திருப்புனவாயில் முதலிய தலங்கள் நாற்றிசைகளிலும் சூழ, அவற்றிற்கு நடுவே அழகுற அமைந்து திருவுத்தரகோசமங்கை திகழ்கின்றது.

பண்டைத்தலம் :

பாண்டிய நாட்டில் உள்ள தலங்களில் இது மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த தலம் ஆகும். இப்பண்டைத் தலத்திற்குப் தேவாரப் பாடல்கள் இல்லையாயினும், மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகத்தில் இதனைப் பெரிதும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

திருத்தசாங்கம் :

திருவாசகத்தில் திருத்தசாங்கம் என்னும் பகுதியில், சிவபிரான் ஆகிய பேரரசனுக்குரிய நாடு, மலை, ஆறு, ஊர் முதலிய பத்துவகைச் சிறப்புறுப்புக்களையும் குறிப்பிடும் இடத்தில், ஊர் என்னும் உறுப்பாக வைத்துத் திருவுத்தரகோசமங்கைத் தலமே சிறந்தெடுத்துப் பேசப் பெற்றிருக்கின்றது. "பத்தர் எலாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும் உத்தரகோசமங்கை ஊர்" என்பது திருவாசகம் திருத்தசாங்கச் செய்யுள்.

இத்திருப்பாடலால் மிகப் பழங்காலத்தாலேயே இந்தச் சிறந்த தலமானது, 'இந்நிலவுலகில் விளங்கும் திருக்கயிலாயம் (சிவபுரம்)' எனப் பத்தர்கள் எல்லாரும் புகழ்ந்து கொண்டாடும்படி ஒப்புயர்வற்ற பெருமையினைப் பெற்றிருந்தது எனத் தெரிகின்றது.

மகேந்திரம் :

சிவபிரான் வலைவீசிய திருவிளையாடல் நிகழ்த்தியதும், வலைஞர்-கள்பால் மகளாய் வந்து வளர்ந்த அம்பிகையை மணம் புரிந்துகொண்டு அருளியதும், கடலிற் சுறுமீனின் வாயினின்று மீட்ட ஆகம நூல்களை உலகுக்கு வெளிப்படுத்தியருளியதும், இத்தலமேயாகும். "கேவேடர் ஆகிக் கெளிறது படுத்து மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்; மற்றவை தம்மை மகேந்திரத்து இருந்து உற்ற ஐம்முகங்களாற் பணித்தருளியும்" எனத் திருவாசகம் கீர்த்தித் திருவகவல் வரிகள், இச்செய்திகளை உணர்த்துதல் காணலாம். மகேந்திரம் என்பது, திருவுத்தரகோச மங்கையின் ஒரு பெயராகச் சிலர் கூறுவர்.

பெயர்க் காரணம் :

இத்தலத்திற்குத் திருவுத்தரகோசமங்கை எனப்பெயர் அமைந்தற் குரிய காரணம் பின்வருமாறு : உத்தரம்-உபதேசம். கோசம்-இரகசியம், மறைபொருள். மங்கை-உமாதேவியார். முன்பு ஒரு காலத்தில் சிவபெருமான், உமாதேவியாருக்கு வேதாகமங்களின் மறைபொருள்களை இத்தலத்தில் உபதேசித்த காரணம் பற்றி, இதற்கு உத்தரகோசமங்கை எனப்பெயர் ஏற்பட்டது.

மற்றொரு விளக்கம் :

இனி, இவ்வாறு அன்றி மற்றொரு வகையாகவும் அறிஞர்கள் இப் பெயர்க் காரணத்தை விளக்குவர். உ-உயர்ந்த. தரம்-தகுதிப்பாடு. கோசம்-நூல். மங்கை-மங்கலம். மங்கலம் என்பது ஊர்ப்பெயர்களில் வரும் ஒருவகைச் சொல் விழுக்காடு. வரகுணமங்கலம் வரகுணமங்கை எனவும், சீவரமங்கலம் சீவரமங்கை எனவும் வருதல் போல, உத்தர கோசமங்கலம் என்பதே உத்தரகோசமங்கை என்று மருவியது எனவும் அறிஞர்கள் கூறுவர். "உயர்ந்த தகுதிப்பாடு மிக்க ஆமக நூல்களை இறைவன் வெளிப்படுத்திய மங்கலம் அமைந்த தலம்" என்பது, இதன் திரண்ட கருத்து.

தலப்பெயர் :

இத்தலத்திற்கு மங்களபுரி, பிரமபுரம், சாத்துவிகத்தானம், வெதிரி காரணியம் (இலந்தைக்காடு), பார்வதிபுரம், சித்தக்ஷேத்திரம், (சிந்திப் பவை யாவும் சித்திக்கச் செய்யும் தலம்), தக்கணகாசி, சதுர்வேதபுரி, கல்யாணபுரி (இறைவன் அம்பிகையை மணம் புரிந்து கொண்ட தலம்), எனப் பல பெயர்கள் உண்டு. இப்பெயர்களினாலேயே இத்தலத்தின் பெருமைகளை உணரலாம்.

தீர்த்தங்கள் :

இங்கே அக்கினிதீர்த்தம், பிரமதீர்த்தம், இந்திரதீர்த்தம், சார்வதி தீர்த்தம், கௌமார தீர்த்தம், பதுமதீர்த்தம், சீதளதீர்த்தம், தேவி தீர்த்தம், அரித்துவசரூப தீர்த்தம் எனப் பல சிறந்த தீர்த்தங்கள் அமைந்து இருக்கின்றன.

இறைவன் பெயர்கள் ;

இத்தலத்தில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமானுக்கு மங்கள நாதர், பிரளயாகேசுரர் (பிரளய காலத்திலும் அழியாதவர்), துரிதா பகர் (துரிசுகள் யாவும் போக்குபவர்) முதலிய பல பெயர்கள் வழங்கும்.

"உத்தரகோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பு" பற்றிக் காட்சி கொடுத்த நாயகர் என்றும், அம்பிகையை இறைவன் இங்கு மணந்துகொண்டதனுற் 'கல்யாணசுந்தரர்' என்றும் பெயர்கள் வழங்கும்.

இறைவி பெயர்கள் :

இத்தலத்தில் அம்பிகைக்கு மங்களேசுவரி, மங்களதாயிநி (மங்களத்தைத் தருபவள்), சுந்தரநாயகி, கல்யாணசுந்தரி எனப் பல பெயர்கள் உண்டு. அம்பிகை இங்கே இறைவனின் சாபத்தினுல் வலைஞர்களிடையே வந்து வளர்ந்து, பின்னர் இறைவனுல் மணந்து கொள்ளப்பெற்றதனுல் "திரைசேர்மடந்தை" எனவும் ஒரு பெயர் வழங்கப்பெறுவள். இது 'திரைசேர்மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்க! வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினைதான் வந்து அடர்வனவே' என வரும் திருவாசகச் செய்யுட் பகுதியாலும் தெளியப் படும்.

நீத்தல் விண்ணப்பம், திருப்பொன்னூசல் :

இத்தலத்தில் பிரமன், வேதமித்திரன், கந்தருவ கன்னியர், அரித்துவசன், நளன், அம்பிகை முதலியோர் சிவபிரானை வழிபட்டுப் பேறு பெற்றனர் எனத் தலபுராணம் கூறுகின்றது. எனினும் மாணிக்கவாசகப் பெருமான் இங்கே சிலகாலம் தங்கியிருந்து, இறைவனை வழிபட்டு, திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பம், திருப் பொன்னூசல் என்னும் இரண்டு திருப்பதிகங்களை அருளிச் செய்தனர் என்பதே, இன்று இத்தலம் பெரிதும் சிறப்புடையதாக மதித்துப் போற்றப்படுதற்குரிய காரணம் ஆகும்.

மரகத நடராசர் :

இங்கே எழுந்தருளி விளங்கும் நடராசப்பெருமானின் திருவுருவம் மரகதம் என்னும் விலையுயர்ந்த பச்சைநிறப் பளிங்கினுல் அமைந்து ஒளிரும் சிறப்பு மிக்கது. தில்லைப் பொன்னம்பலத்தில் ஆடல்புரியும் முன்னரே, நடராசப் பெருமான் இங்குத் திருநடனம் புரிந்தான் என்பது தலபுராணம். ஆதலின் இத்தலத்திற்கு ஆதிசிதம்பரம் என்றும், இறைவனுக்கு ஆதிசிதம்பரேசுரர் என்றும் பெயர்.

அருணகிரிநாதர் :

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு விளங்கியிருந்த அருணகிரிநாத சுவாமிகள், இத்தலத்திற்குச் சென்று வழிபட்டு மகிழ்ந்து, இரண்டு திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்திருக்கின்ருர். "உத்தம மா வளங்கொள் உத்தரகோசமங்கை" என அவர், இத்தலத்தினை வியந்து புகழ்ந்து போற்றியுள்ளார்.

முடிவுரை :

இத்தகைய சிறப்புமிக்க திருவுத்தரகோசமங்கை என்னும் சிறந்த பழம்பெருந் தலத்திற்கு நாமும் சென்று, அருள்மிகு மங்களநாயகி உடனுறை மங்களநாதரை வழிபட்டு, இன்னருள் பெற முயலுவோமாக. இத்திருக்கோயிலில் இப்பொழுது பெரிய கல்திருப்பணி நடந்து வருகின்றது. பக்த பெரியோர்கள் வேண்டிய உதவியைச் செய்து ஆண்டவன் அருளைப் பெறலாம்.

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/- வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

"வன்தொண்டன் என்பதோர் வாழ்வு"

டாக்டர் வித்துவான் **திரு. வை. இரத்தினசபாபதி,** எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன்னுரை :

2. சபைமுன் வன்மைகள் பேசிட.........

"தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள் சபைமுன் வன்மைகள் பேசிட வன்தொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்" என்பது திருநாவலூரர் எனப்பெறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கு. இறைவன் தம்மை வந்து ஆட்கொண்ட வரலாற்றைத் தாமே எடுத்துக் கூறும் அகச்சான்றே இது.

இறைவன் தன்னை ஆட்கொண்ட அந்தநாளில் சபைமுன் வன்மைகள் பேசினேன் என ஆரூரரே ஒத்துக்கொள்ளுகிறார். 'வன்மைகள் பேசவும் புன்மைகள் பேசவும் பழக்கப்பட்ட என்னைத் தன்மையினால் ஆட்கொண்டான் இறைவன்' என்று பல இடங்களிலும் எடுத்துக் காட்டுகின்றார்.

'சபைமுன் வன்மைகள் பேசிட' என்ற சுந்தரர் திருவாக்கிற் குறிப்பிடப் பெறும் சபை எது?

மணமகனார் நம்பியாரூரர். அவர் திருநாவலூரிலிருந்து குதிரை மேல் அமர்ந்து மணப்பெண்ணின் ஊருக்குச் செல்கிறார். மணப்பெண்ணின் ஊர் புத்தூர். நம்பியாரூரர் திருமணம் அங்கே அமைந்த காரணத்தால் அவ்வூருக்கு 'மணம் வந்த புத்தூர்' என்ற பெயர் உண்டாயிற்று. நம்பியாரூரர் திருமணம் இடையிலேயே தடைப்பட்டு விட்ட காரணத்தால் அவ்வூருக்கு 'மணம் தவிர்ந்த புத்தூர்' என்ற பெயரும் அமைந்தது. இப்போது 'மணந்த புத்தூர்' என மருவி வழங்கப் பெறுகிறது.

எக்காலத்தும் நிலையாக அமைந்து வரும் திருமணக் கோலத்தையுடையவராகிய எங்கள் வள்ளலார் நம்பியாரூரர் திருமணப் பந்தரின் முன்னே, குதிரையினின்றும் இறங்கி வந்து திருமாமறை மணத்தொழில் தொடங்கும் பந்தரின்கண் அமைக்கப்பெற்ற ஆசனத்திற் சென்று அமருகின்றார்.

மணப்பெண் இன்னும் வந்து அமரவில்லை. மணத்தொழில் தொடங்கி விட்டது என்று சொல்வதற்கில்லை; தொடங்க இருக்கிறது. வேதியக் கிழவர் ஒருவர் விரைந்து வருகிறார்.

> "வந்து திருமாமறை மணத்தொழில் தொடங்கும்
> பந்தரிடை நம்பி எதிர் பன்னு சபை முன்னின்று"

என்று சேக்கிழாரடிகள், வேதியக் கிழவர் வந்து நின்ற நிலையை எடுத்துக் கூறுகின்றார்.

"மணத்தொழில் தொடங்கும் பந்தரிடை நம்பி எதிர் நின்று" என்ற அளவில் சொல்லி அமைத்து விடலாம். ஆனால் சேக்கிழாரடிகள்

சுந்தரர் தேவாரத்தை உளங்கொண்டு அதற்கு விளக்கமாகக் கூற வேண்டும் என எண்ணியதால் சில சொற்களை இழுத்துச் சேர்க்க வேண்டிய கடமைப்பாட்டில் நிற்க வேண்டியவராகிறுர்.

‘சபைமுன் வன்மைகள் பேசிட’ எனத் தேவாரத்தில் வருவதால் திருமணப்பந்தரில் மணச்சடங்கு நடைபெறும் இடத்தைச் ‘சபை’ என அமைத்துக் கூறுகிறுர். திருமண வேள்விச்சாலை, மணவறை போன்ற பெயர்களாற் குறிக்கப்பெற வேண்டிய அந்த இடம் 'சபை' என்ற சொல்லாற் குறிக்கப் பெறுகிறது.

மணவறையைச் ‘சபை’ என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? சபையாகவே ஆக்கிக் காட்டுகிறுர் சேக்கிழாரடிகள்.

“பந்தர், இடை, நம்பி எதிர், பன்னுசபை முன்” என்ற சேக்கிழார் வாக்கில், இடை, எதிர், முன் என்ற மூன்று சொற்களில் இரண்டு தேவையில்லாமல் நிற்கின்றன.

மக்கள் நெருங்கி அமர்ந்திருக்கின்ற காரணத்தால் அவ்விடம் ‘சபை’ எனப்பெறும் என்ற பொருள்படுமாறு “பன்னுசபை” என அமைத்துக் காட்டுகின்றுர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புரை எழுத வந்த திரு.வி.க. அவர்கள் ‘பன்னுநெருங்கிய’, என எழுதியமைத்தார்கள். வழக்கைச் சொல்ல வந்த கிழ வேதியர், திருநாவலூரரைத் தனியே அழைத்துக் கொண்டு தனியிடத்துச் சென்று, சொல்லி, வெற்றிபெற முயற்சிக்காமல், நான்கு மக்கள் கூடியிருக்கும் இடத்தில், வெளிப்படையாகச் சொல்லிவிட்டதாலேயே அவ்விடம் ‘சபை’ என்ற பெயருக்கு இலக்காகி விடுகிறது. மணவறையை நீதிச்சபையாக ஆக்க வேண்டும் என்ற காரணத்தாலேயே, ‘நம்பியாரூரரே நான் சொல்வதைக் கேள்’ என்று கூருமல் “இந்த மொழியை என் எதிரிலுள்ள எல்லாரும் கேளுங்கள்” என்று கூறுகிறுர்.

இவ்வரிக்கு வேறோர் உரையும் உண்டு. வந்து நின்ற கிழ வேதியர் வழக்கைச் சொன்னபோது, நம்பியாரூரர் உடனே ஒத்துக் கொள்ளவில்லை. வழக்கை எதிர்த்துச் சொன்னுர். அவர் மட்டுமன்று; அங்கிருந்த கூட்டத்தில் யாரும் அதை ஒத்துக் கொள்ளவில்லை. வழக்கைக் கொண்டு வந்த கிழ வேதியரைத் தவிர வேறு அங்கே கூடியிருந்த எல்லாருமே எதிர் மொழியப் போகிறவர்களே என்ற குறிப்புத் தோன்ற ‘எதிர் பன்னு சபை’ [‘எதிர்த்துச் சொல்ல இருக்கும் சபை’] என்று உரை கூறுவர். இவ்வுரைக்குப் பன்னுதல்-சொல்லுதல் என்பது சொற்பொருள். “நம்பி எதிர் பன்னு சபை முன் நின்று” என்ற சொற்களை நம்பிக்கும் எதிர் பன்னு சபைக்கும் முன்று நின்று என்று சொல்லமைப்புச் செய்து கொள்ள வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் திருமண வேள்விச் சாலையை ஒரு ‘சபை’ என ஏற்றுக் கொள்வதற்கு மரபு இடந்தருமா? என்பது ஐயமே! புத்தூரில் தொடங்கிய நிகழ்ச்சி, திருவெண்ணெய் நல்லூரிற் சென்று முடிவதால், சுந்தரர் “சபைமுன் வன்மைகள் பேசிட” என்று குறிப்பிட்டது திருவெண்ணெய் நல்லூர்ச் சபையையே என்று கொள்ளவும் இடம் உண்டு. வேதபாரகரின் மிக்கார் விளங்குகின்ற பேரவையே திருவெண்ணெய் நல்லூர் அவை. அங்கே ‘ஆவணக்களரி’ என்று சொல்லப் பெறும் ‘ஆவணக்காப்பறை’ முதலியன உண்டு. வழக்கினைக் கேட்டு நீதிவழங்கும் நீதிமன்றம் அது. அதைச் ‘சபை’ என்று சொல்வது முற்றிலும் பொருந்துவதொன்றே. வேறோர் ஐயம் உண்டு.

புத்தூர் மணவேள்விச் சாலையையும் 'சபை' என்றே ஏற்றுக் கொள்வோம். வழக்குத் தோன்றிய இடமாகிய புத்தூர்ச்சபையிலாயினும், வழக்கு நிறைவு பெற்ற இடமாகிய திருவெண்ணெய் நல்லூர்ச் சபையிலாயினும் நம்பியாரூரர் 'வன்மைகள் பேசினர் என்பது உண்மையாகுமா?

நம்பியாரூரரே வன்மைகள் பேசியதாக ஒப்புக்கொண்ட பிறகு, எந்தச் சபையில் பேசினர்? என்ன வன்மைகள் பேசினர் என்று ஆய்வு செய்தல் தேவையற்ற ஒன்று என்று வினவத் தோன்றும். இராமன் தன்னைக் கொன்றது அறச்செயலே என்று வாலி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனல் மக்கள் மனமும் உலகியற் கொள்கையும் அச்செயலை இன்னும் ஆய்வு செய்து விளக்கங்கூறிக் கொண்டுதானே வருகின்றன.

'அடிமை' என்று ஓலையைக் காட்டி நிறுவிவிட்ட பிறகு ஆண்டான் தன் அடிமையைப் பார்த்து, நீ வன்மைகள் பேசினய் என்று சொன்னல். அடிமையாக இருக்கும் சுந்தரர் "நான் உண்மையைத் தானே சொன்னேன்; அது எப்படி வன்மை ஆகும்?" என்று எதிர்த்துக் கேட்கவா முடியும்! "வன்மைகள் பேசினை" என்றதும், சுந்தரர், "ஆமாம் ஆமாம். வன்மைகள் மட்டுமா பேசினேன்; புன்மைகளும் பேசினேன்" என்று கூறினர். அதைத் தவிர வேறு என்ன கூற உரிமை உண்டு அவருக்கு!

முறையான அளவை இயலையும், அற்றம் காக்கும் கருவி எனப் பெறும் அறிவின் இலக்கணத்தையும், உலகியலின் செம்மையையும் அடிப்படையாகக் கொண்டு அறவழியில் நின்று சிந்திக்கும் போது, அத்தகைய முறையான சிந்தனையில் எழும் வினக்களுக்கு விடை சொல்லித் தான் ஆகவேண்டும்; அது நியதி.

புத்தூரில் நம்பியாரூரர் வழக்கைக் கேட்டவுடன் பேசினர், சிரித்தார் கிழவேதியரைப் பின் தொடர்ந்து ஓடிச்சென்று, பற்றி, அவர் கையிலிருந்த ஓலையைப் பிடுங்கிக் கிழித்துப் போட்டதாகிய செயலையும் செய்தார். சுந்தரர் வன்மை பேசினர் என்று கூறியதைவிட, 'வன்மை செய்தார்' என்று சொல்லியிருக்கலாம். ஓடுதற்கு வலிமையில்லாத கிழவரைத் துரத்திச் சென்று, ஓலையை வன்மையாகப் பிடுங்கிக் கிழித்துப் போட்ட வன்மைச் செயலை வந்த வேதியக் கிழவர் அடிக்கடி எடுத்துக் கூறவில்லை. ஏன்?

சுந்தரர் செய்த வன்மைச் செயல் வேதியக் கிழவருக்கு நன்மைச் செயலாக முடிந்தது.

உலகியலுக்கு முரண்பட்ட ஒரு வழக்கை-பிழைநெறி வழக்கை-கூடியிருந்த அந்தமணவறை மக்கள் ஒருவரும் ஒத்துக் கொள்ள இயலாத ஒரு வழக்கை முன்மொழிந்து பேசுகிருர் வேதியக்கிழவர் உலகியல் நெறி இல்லை என்ருல். ஓலை இருக்கிறது என்கிருர். அவ்வளவில் சுந்தரர் 'ஓலையைக் காட்டுக' என்று கேட்டார்.

நான் ஆண்டான்; நீ அடிமை. ஆண்டான் அடிமையிடத்தில் ஓலையைக் காட்டியா பணி கொள்ள வேண்டும். மாவட்டத் தண்டல் நாயகமாகப் பதவியேற்று, அலுவலகத்திற்கு முதன்முதல் வருகின்ற மாவட்டத் தலைவரிடம், அலுவலக அறையின் முகப்பில் நின்று கொண்டிருக்கும் பணியாள், "ஐயா! உங்களுக்கு மாவட்டத் தண்டல் நாயகமாகப் பதவியமைத்த அரசு ஆணையைக் காட்டுங்கள், அப்போதுதான்

உங்களை உள்ளே அனுப்ப முடியும்; உங்களுக்கு யான் பணியாளனாகப் பணியாற்ற முடியும் என்று சொல்ல முடியுமா?" அதுபோல, "என்னிடம் ஓலையை வாங்கிப் பார்க்கும் அளவுக்கு உனக்குத் தகுதி இல்லை. நீ என் அடிமை; என் ஆணைப்படி பணி செய்ய வேண்டுவது ஒன்றே உன் வேலை; சபையோர் கேட்டால் நான் காட்டுவேன்" என்று மறுத்துக் கூறுகிறார்.

கேட்ட அவ்வளவில் சுந்தரருக்குக் கோபம் உண்டாகிறது. ஓலையைப் பிடுங்குவதற்காகச் செல்லுகின்றார். கிழவேதியர் திருமணப் பந்தரில் அங்கும் இங்கும் ஓடுகிறார். இறுதியில் நம்பியாரூரர் கிழவேதியரைப் பற்றி, ஓலையைப் பிடுங்கி "ஆளாய் அந்தணர் செய்தல் என்ன முறை" என்று சொல்லிக் கிழித்துப் போட்டார்.

இங்கே ஒன்றைச் சிந்திக்க வேண்டும். சுந்தரர் சிவாச்சாரியார் மரபில் வந்தவர். முப்போதும் இறைவன் திருமேனியைத் தொட்டுப் பூசை செய்யும் மாசிலா மரபில் வந்த வள்ளல். முழுமுதற் பொருளாம் சிவனையே ஆசாரியனாகப் பெற்று, உலகில் தம்மைப் போலப் பிறந்து இறந்து உழலும் எந்த ஒருவரையும் உலக குருவாக ஏற்றுக் கொள்ளும் மரபில் வாராத பெருந்தகைமையினர். மாதொரு பாகனுக்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துள் தோன்றியவர். சைவ அந்தணர் குலம் என்று இவர் குலத்தைப் பாராட்டுவார் சேக்கிழார். சிவாச்சாரியர்களுள்ளும் ஒருவர் ஏனையோருக்கு அடிமையாதலோ பணிபுரிதலோ இல்லை. பரிபூரணனுக்கு அடிமை ஆதல்; பணிசெய்தல் ஒன்றே அவர்தம் நெறி.

ஆகாயப் பூ நன்றாக மணம் வீசுகிறது; அதை என் மூக்கு மிக நன்றாக அனுபவிக்கிறது; அது மணம் வீசுகிறது என்பதற்கு என் கையில் உள்ள புத்தகம் சான்று சொல்லுகிறது என்ற கதையாய் முடிந்ததை எண்ணி நகைக்கிறார் நம்பியாரூரர்.

சைவ அந்தணர் மரபுக்கு ஏற்ப அருங்கலைகள் பலவும் கற்றுணர்ந்த மேதை. அதுமட்டுமன்று. நரசிங்க முனையரையர் என்னும் நாடுவாழ் அரசர் விரும்பி அன்பினால் மகன்மை முறையாக ஏற்றுக் கொள்ளப் பெற்றவர். அரச குமாரராக வளர்ந்து சிறந்தவர். அரச குமாரராக வளர்ந்த காரணத்தால், அந்நிலைக்கேற்ற வகையில் விரிந்து பரந்த கல்வியும், கலையாய்வும், வரலாற்றுத் தெளிவும் பெற்றுச் சிறந்தவர் சுந்தரர். மன்னவர் திருவும் மாண்புமிகு வைதிகத் திருவும் பொங்க வளந்தவர். யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய அரசர்க்குரிய கலைகளையும் ஓதி உணர்ந்தவர். பிற்காலத்தில் 'சேரமான் பெருமாள் நாயனார்' போன்ற அரசர்களோடு நெருங்கிப் பழக வேண்டிய வாய்ப்பு அமையும் காலத்தில் ஈடு கொடுத்துப் பழக வேண்டிய அளவுக்கு அரசர்க்குரிய விதிமுறைகள் தகுதிகள் முதலியவைகளை இளமையிலேயே பழகி அனுபவம் பெற்றவர். அரசர்க்குரிய கடமைகளை அறிந்து காப்பாற்றுதற்குரிய நீதி, மரபு, சாதிமுறை, ஒழுக்க நியதிகளமைந்த நூல்களைக் கற்றது மட்டுமன்றி, நரசிங்க முனையரையரோடு உடனிருந்து பழகியறிந்தவர். இத்துணைப் பரந்த கல்வியறிவுக்கும் எட்டாத ஒரு வழக்கு கேட்டவருள் ஒருவராவது ஒத்துக் கொள்ளாத வழக்கு. அவ்வழக்குக்குச் சான்றாக ஒரு ஓலை.

(தொடரும்)

திருமாலடியார்

இராமானுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(15)

இராமானுசர் திருவனந்தபுரம் என்னும் அனந்தசயனத்தில் பதும நாபக் கடவுளை வழிபட்டுப் பின்பு, வாதுக்கு வந்த மாயாவாதிகளை வென்று அங்கு இராமானுச மடத்தை ஏற்படுத்தினர். மற்றும் நம்மாழ்வாரால் பாடப்பெற்ற மலையாளத் திருப்பதிகளுக்கெல்லாம் சென்று வழிபட்டார். சில திங்களுக்குப்பின் மேலைக் கடற்கரை வழியாக வடநாட்டுச் செலவை மேற்கொண்டார். வடமதுரை, கோகுலம், பிருந்தாவனம் முதலிய திருப்பதிகளை சேவித்துக் கொண்டு சாளக்கிராமம், அயோத்தி நைமிசாரண்யம் வழியாகப் பதரிகாச்சிரமம் என்னும் வடபேரிமயமால் வரையை அடைந்தார். அங்கு நரநாராயணனுய்க் காட்சியளிக்கும் பரம்பொருளை வழிபட்டுச் சில காலம் தங்கியிருந்தார்.

பதரிகாச்சிரமத்தில் இராமானுஜ மடத்தை ஏற்படுத்திச் சில சீடர்களை நியமித்து, அவர்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தை உபதேசித்தார். திருக்கோயில் கதவு சாத்தப்படும் பனிக்காலத்தில், அங்கிருந்து தென்னுடு நோக்கிப் புறப்பட்டார். வழியில் ஒரிசா மாநிலத்திலுள்ள பூரி என்னும் ஜகந்நாதக்ஷேத்திரத்திற்கு வந்து, கோயில் வழிபாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். முக்கியமாக அந்தக் கோயிலில், பூசை முறைகளிலும், வழிபாட்டு முறைகளிலும் அந்தக் காலத்தில் சாதி வேறுபாடு மிகுதியாக இருந்தது. அதையெல்லாம் தம் வாதத் திறமையால் மாற்றியமைத்து அங்கும் இராமானுச மடத்தை உண்டாக்கிச் சீடர்களை ஏற்படுத்தினர். பின்பு ஸ்ரீகூர்மம், ஸ்ரீ காகுளம், அகோபிலம் வழியாகத் திருப்பதிக்கு வந்து சேர்ந்தார்.

அப்பனுக்குச் சங்காழி அளித்தல் :

இராமானுசர் திருப்பதிக்கு வந்தபோது அங்குச் சைவ வைணவச் சண்டை வலுத்திருந்தது. திருப்பதி-திருமலையைச் சைவர்கள் தங்கள் இறைவனுகிய சிவபெருமான் உறையுமிடமாகக் கருதி வாதிட்டனர். அதற்கு ஆதாரமாகப் பேயாழ்வார் அருளிய "தாழ்சடையும் நீள்முடியும்" என்ற பாடலை எடுத்துக் காட்டினர். ஆயினும் இராமானுசர் அக்காலத்தில்இருதிறத்தாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேரறிஞராய் விளங்கியதால் அவரிடம் முறையிட்டு முடிவு காண்வந்தார்.

இராமானுசரும் திருவேங்கடவன் திருமால்தான் என்றும், தொண்டைமான் என்னும் பக்தனுக்குத் தன்னுடைய சங்கு சக்கரங்களை அளித்த காரணத்தால் அவைகளைத் திரும்பப்பெறும் வரை அவன் கைகளில்

அவைகளை நாம் காணமுடியவில்லை என்றும் கூறினர். ஆயினும் சைவர்கள் அதை நம்பவில்லை. அதற்குப் பின்பு யாவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இராமாநுசர் ஒரு உபாயத்தைக் கூறினர். அதாவது சிவச்சின்னங்களாகிய மழுவையும், உடுக்கையையும் ஒருபுறமும், திருமால் சின்னங்களாகிய சங்கு சக்கரங்களை ஒருபுறமும் இரவில் கருவறைக்குள் வைத்து விடவேண்டும். மறுநாள் காலை அவைகளில் எம்பெருமான் எந்தச் சின்னங்களை ஏற்றுக் காட்சியளிக்கின்ருனே அந்தச் சின்னங்களுக்குஉரிய கடவுளாக நாம் ஏற்போம் என்று கூறினர்.

இராமாநுசரின் இந்தக் கருத்தை யாவரும் ஏற்றனர். அதன்படியே அன்று இரவு இருதிறத்தாரின் சின்னங்களும் கருவறையில் வைக்கப் பட்டன. அவரவர் தம் தம் விருப்பத்தை வேண்டிக் கொண்டனர். பொழுது விடிந்தவுடன் திருப்பள்ளியெழுச்சிபாடி, கதவைத் திறந்து பார்த்தபொழுது, சங்குசக்கரங்களை இறைவன் கையிலேந்திக் காட்சி யளித்தான். வைணவர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தார்கள். அப்பொழுது இராமாநுசர் இறைவனை யார் யார் எப்படி எண்ணி வழிபாடு செய்கிருர்களோ அப்படியே அவர்களுக்கு அவன் காட்சி அளிப்பான். அந்த வகையில் தான் இரண்டு உருவையும் ஒன்ருய்க் காணவிழைந்து பேயாழ்வார் திருவேங்கடவனைப் பாடியருளினர். அவருடைய பாட்டின் பொருளாகவே மழுவையும், சக்கரத்தையும் ஏந்தி, சடையையும், முடியையும் தரித்து ஆழ்வாருக்குப் பரமன் காட்சியளித்தான். இதில் வீண் வழக்கிற்கு இடமில்லை. தத்துவம் ஒன்றுதான். உபாசனு பலத்தாலே வேறுபாறு காணப்படுகிறது என்று சொல்லி, அதற்கு ஆதாரமாக

> 'தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
> தமருகந்த தெப்பேர் மற்றப் பேர்
> தமருகந்த தெவ்வண் ணம் சிந்தித்திமை யாதிருப்பரே
> அவ்வண் ணமாழி யானும்'

என்ற ஆழ்வார் வாக்கினை எடுத்துக் காட்டி விளக்கினர்.

இவ்விதம் திருவேங்கடவனுக்குச் சங்கும் சக்கரமும் அளித்த காரணத் தால் இராமாநுசரை "அப்பனுக்குச் சங்காழி அளித்து கந்த பெருமான்" என்று பக்தர்கள் கொண்டாடலாயினர். தவிர, ஐம்பெருங்காப்பியங் களுள் ஒன்ருகிய சிலப்பதிகாரத்தில்

> "பகைஅணங்கு ஆழியும் பால் வெண் சங்கமும்
> தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி" என்று

திருவேங்கடவன் சங்கு சக்கரங்களை யேந்திய திருமாலாக வருணிக்கப் பட்டிருப்பதையும், நம்மாழ்வாரால் "அலர்மேல் மங்கை உறைமார்பனுக" போற்றப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டிச் சைவர்களுக்கு உண்மையை உணர்த்தினர் என்றும் பெரியோர் கூறுவர்.

இவ்விதம் திருமலையில் சிலகாலம் தங்கித் திருவேங்கடவனுக்குத் தொண்டு புரிந்து வந்த இராமாநுசர் தமது சீடர்களுடன் திருவரங்கத் திற்குப் புறப்பட்டார். திருவரங்கத்தில் இராமாநுசருடைய மடத்தில் கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானுர், கிடாம்பி ஆச்சான், வடுகநம்பி போன்ற அறிவாலும் அடக்கத்தாலும் உயர்ந்த சீடர்கள் ஸ்ரீபாஷ்யத்தையும் திருவாய் மொழி

யின் உரைவளமான பகவத் விஷயத்தையும் இராமாநுசரிடம் பயின்று வந்தனர். அவர்களைத் தவிர ஆயிரக்கணக்கான வைணவர்கள் நாள் தோறும் வந்து இராமாநுசருடைய உபதேசங்களைக் கேட்டுச் சென்றனர்.

பட்டர் அவதாரம் :

இராமாநுசருடைய சீடர்களில் கூரத்தாழ்வான் மிக்க பேரறிவாளர். அதோடு தாம் கூரத்தில் வாழ்ந்த காலத்தில் பெருஞ் செல்வராக இருந்தும், அச்செல்வத்தை யெல்லாம் வறியவர்களுக்கு வழங்கிவிட்டு மனைவியோடு வறியநிலையிலேயே வைராக்கிய பக்தி நெறி ஒன்றையே சாதனமாகப்பெற்று இராமாநுசரை அடைந்திருந்தார்.

ஸ்ரீரங்கத்தில் கூரத்தாழ்வான் வாழ்ந்த காலத்தில் சில இல்லங் களுக்குச் சென்று அன்பர்கள் கொடுக்கும் அமுது படியைப் பெற்று வந்து தம் வீட்டில் மனைவியாகிய கூரத்து ஆண்டாளிடம் கொடுப்பார். அவ்வமுது படியைப் பக்குவமாகியபின் அதைத் தம் கோவிலாழ்வாரில் உறையும் பெருமாளுக்கு நிவேதனம் செய்து அந்த சேடத்தையே அவரும் அவருடைய மனைவியாரும் உண்பது வழக்கம்.

மழைகாலத்தில் ஒருநாள் ஆழ்வான் வெளியில் செல்ல முடியவில்லை. அன்று இறைவனுக்கு உள்ளத்தாலேயே பழம் முதலிய நிவேதனப் பொருள்களைப் படைத்து நிவேதனம் செய்து விட்டு வெறும் துளசியை யும் தீர்த்தத்தையும் உட்கொண்டார். அந்தச் சமயத்தில் கோவிலில் அரங்கனுக்குப் பூசையாகிப் பொங்கல் நிவேதனமாயிற்று. அந்த மணி ஓசையைக் கேட்ட கூரத்தாழ்வானின் மனைவி, இறைவனை நோக்கி 'உம்முடைய பக்தராகிய ஆழ்வார் பட்டினி கிடக்க, நீர் மாத்திரம் ஆடம் பரமாக உண்ணலாமோ?' என்று கேட்பதுபோல் மனத்துக்குள்ளே எண்ணினள்.

திருவரங்கன் செவியில் ஆண்டாளின் உள்ள உரை கேட்டது, கோயில் பிரசாதத்தை வழக்கம்போல் பெற்றுச் செல்லும் உத்தம நம்பியை அன்று ஆழ்வானிடம் அப்பிரசாதத்தை வழங்குமாறு (இறைவன்) கட்டளையிட்டார். எதிர்பாராதவகையில் அந்நம்பியும் அப்பொங்கல் பிரசாதத்தை ஆழ்வான் இல்லத்திற்கு வந்து அப்படியே கொடுத்துவிட்டார். ஆண்டாளும் இறையருளை எண்ணி வியந்து முதலில் அப்பிரசாதத்தைத் தம் கணவராகிய ஆழ்வானுக்கு அளிக்க முன் வந்தார். அப்போது கூரத்தாழ்வான் "இப்பிரசாதம் உன்னுடைய வேண்டுகோளால் வந்தது என்று கருதுகின்றேன். ஆதலால் இப் பிரசாதத்தில் பெரும்பகுதி உனக்கே சொந்தமாகும்" என்று கூறி அதில் தான் ஒரு கவளம் மாத்திரமே எடுத்து உட்கொண்டார். எஞ்சிய பிரசாதத்தை மிகவும் பக்தியோடு மனைவியாகிய கூரத்து ஆண்டாளும் உண்டாள். அப்பிரசாத பலனால், ஆண்டாளம்மையும் கருவுற்றுப் பத்துத் திங்கள் கழிந்தவுடன் திவ்வியமான இரண்டு ஆண் குழந்தைகளை ஒரே சமயத்தில் பெற்றெடுத்தாள்.

கூரத்தாழ்வானுக்கு ஆண் குழந்தைகள் பிறந்த செய்தியை இராமா நுசர் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். எம்பாரை அழைத்துக் கொண்டு கூரத்தாழ்வான் திருமாளிகைக்குச் சென்று அக்குழந்தைகளைக் குளிரப் பார்த்து அருளாசி வழங்கினர். தாம், பரிசாகக் கொண்டு

வந்த 'ஐம்படைத்தாலி' என்னும் ஆபரணங்களை இரண்டு குழந்தைகளுக்கும் அணிவித்தார். முதற் குழந்தைக்குப் பராசர முனிவரின் பெயரை இட்டார். பிற்காலத்தில் பராசர பட்டர் என்று மிகவும் புகழோடு வாழ்ந்தவர் இவர். இரண்டாவது பிள்ளைக்கு வியாசர் என்று பெயரிட்டார்.

ஆழ்வானின் இப்பிள்ளைகள் தகப்பனுரைப் போலவே அதிக அறிவு படைத்தவர்களாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தனர். பட்டர் சகல வேத, சாத்திர, ஆகமங்களையும் பயின்று, சிறிய வயதிலேயே பெரிய வித்துவானுகி, அனைவரையும் வாதில் வெல்லும் திறமையைப் பெற்றிருந்தார். இவ்விதம் அறிவாற்றலால் கூரத்தாழ்வானின் மூத்த குமாரரான பட்டர் அதிசயமாக வளர்ந்து வருவதைப் பார்த்து இராமாநுசர் பூரித்துப் போனுர். எதிர்காலத்தில் விசிட்டாத்துவைத சித்தாந்தக் கொள்கை நன்கு பொலிவு பெறும் என்று எண்ணி மகிழ்ந்தார்.

இராமாநுசர் ஒருநாள் திருவரங்கத்தில் திருவாய்மொழிக்கு உரை கூறிக்கொண்டிருந்த பொழுது, பிள்ளை உறங்காவில்லிதாசர் என்ற சீடர் எழுந்திருந்து நின்ருர். அவரை நோக்கி இராமாநுசர் "என்ன வேண்டும்" என்று கேட்ட பொழுது, "கீழ்க்குலத்தில் பிறந்த எனக்குச் சிறந்த அடியார்களுக்குக் கிடைக்கக் கூடிய மோட்சம் கிடைக்குமோ" என்ருர். அதற்கு இராமாநுசர் "இராமாவதாரத்தில் விபீடணனேடு வந்த நால்வரையும் எம்பெருமான் ஏற்றுக் கொண்டு மோட்சம் அளிக்கவில்லையா? இறையடியார்களில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்?" என்று சொல்லி "கமுகுக்குப் பாய்ச்சிய தண்ணீரை அத்தோப்பிலுள்ள வாழையும் உண்டு வாழும்' என்பதை அறியீரோ? எனக்கு மோட்சம் கிடைக்குமானுல் உமக்கும் அது கிடைக்கும்" என்று தன்னேடு அவரை ஒப்பிட்டுக் கொண்டார்.

இராமாநுசருடைய இப்பெருங் கருணையை எண்ணி எண்ணி வில்லிதாசர் வியப்புற்ருர். அன்றுதொட்டு இறைவனைப்பற்றிச் சிறிதும் நினையாமல் இராமாநுசருடைய திருவடிகளே தஞ்சம் என்று சரணுகதி செய்து, அவருக்குத் தொண்டு செய்வதையே பெரும்பேருகக் கொண்டு விளங்கினுர்.

இவ்விதம் உயர்குலத்தில் பிறந்த முதலியாண்டானையும், இழி குலத்தில் பிறந்த வில்லிதாசனையும் சமமாகவே கருதிய இராமாநுசர் ஒரு ஊமைக்கு அருள்புரிந்த வரலாறும் போற்றுதற்குரியதாயமைந்துள்ளது.

ஊமை ஒருவன் இராமாநுசரைச் சரணடைந்து உயர்ந்த மறைப் பொருள்களை அறிய விரும்பினுன். கருணை வள்ளலான இராமாநுசர் அந்த ஊமையின் பக்தியைப் பாராட்டி, அவனைத் தனியே அழைத்துச் சென்று கதவைச் சாத்திவிட்டுச் சைகைகளின் மூலமாக அவனறியும் படி சில அர்த்த விசேடங்களை விளக்கினுர். இதைக் கதவின் துவார வழியாகப் பார்த்த கூரத்தாழ்வான் தினவு தீர உண்மைகளை அறிந்து கொள்வோம் என்று கூர்ந்து நோக்கி விளக்கம் பெற்ருர். அப்பொழுது கூரத்தாழ்வான் இந்த ஊமையைப் போல் ஒரு சாத்திரமும் படிக்காமலிருந்திருந்தால் இராமாநுசர் எனக்கும் இப்படி அருள்பாலித்திருப்பார். கூரத்தாழ்வானுகப் பிறந்து, சாத்திரங்களைக் கற்றுக்கெட்டேனே' என்று தன்னை நொந்து கொண்டார்.

(தொடரும்)

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

பூசிப் பவர்சிலர் பூசித் தன்பொடு புனிதன்ரு
ணேசிப் பவர்சிலர் பிரவா வரமரு ணிமலாவென்
றியாசிப் பவர்சிலர் திருமுறை யெழுதிக் களிகூர
வாசிப் பவர்சில ராகவிருந்தும கிழ்ந்தார்கள். 69

(இ-ள்): திருமுறையெழுதி-அவ்வடியார்களுள் திருத்தொண்டர் புராணத்தை யெழுதி; பூசிப்பவர் சிலர்-சிவபூசை செய்கின்றவர்கள் சிலபேரும்; பூசித்தன்பொடு புனிதன்ருணேசிப்பவர் சிலர்-அவ்வாறு பூசித்து நடேசப்பிரான் திருவடிகளைத் தியானிக்கின்றவர்கள் சிலபேரும்; பிறவாவரமருணிமலா வென்றியாசிப்பவர் சிலர்-நடேசப்பிரானே அடியோம் இறந்து பிறவாவரம் அருளென்று கேட்கின்றவர்கள் சிலபேரும்; களிகூர வாசிப்பவர் சிலராக-அத்திருமுறையை விருப்பமுற வாசிக்கின்றவர்கள் சிலபேருமாக; இருந்து மகிழ்ந்தார்கள்-இருந்து மகிழ்ச்சியடைந்தார்கள். (எ-று).

இவ்விரண்டுங் குளகம்.

தெள்ளு திரைக்கடன் மீதுமி தந்ததி ருத்தோணி
வள்ளலை யன்புசெ யன்பர்ம டங்கடொ றும்பாலர்
மெள்ளவி ருந்துமி ழற்றுபு ராணவி ருத்தத்தைக்
கிள்ளைகள் பாடியு ரைப்பன கேட்பன'மெய்ப்பூவை 70

(இ-ள்): தெள்ளுதிரைக்கடன் மீதுமிதந்த-தெள்ளிய அலையோடு கூடிய கடலில் ஊழிகாலந்தோறுமிதந்த; திருத்தோணி வள்ளலை யன்புசெய்-சீகாழியில் திருவவதாரஞ் செய்த திருஞானசம்பந்த மூர்த்திகளுக்கு அன்பு செய்கின்ற; அன்பர் மடங்கடொறும்-தேவாரத் திருமுறையோதும் அடியவர்கள் மடங்கள்தோறும்; பாலர் இருந்து மெள்ளமிழற்று புராண விருத்தத்தை-அவர் சிறுவர்கள் அமைவாக விருந்து வாசித்துப் பொருளுரைக்குந் திருத்தொண்டர் புராண விருத்தத்தை; கிள்ளைகள் பாடியுரைப்பன-கிளிப்பிள்ளைகளும் கற்றுக் கொண்டு பாடிப் பொருள் சொல்வன; மெய்ப்பூவை கேட்பன-அதை நாகண வாய்ப்புட்கள் கேட்பன. (எ-று).

கிள்ளைகளும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

மற்றதுகண்டுக ளித்தந லத்தம னத்தோடு
சுற்றிய மந்திரி மாரொடு தந்திரி மார்சூழத்
தெற்றென வந்துதி ரண்டுமு ரண்டரு சீர்நாடு
பெற்றது செல்வமெ னத்தனி யோகைபெ ருத்தார்கள். 71

(இ-ள்): அதுகண்டு களித்த-அதனைக் கண்டுகளிப்படைந்த; நலத்த மனத்தோடு சுற்றிய-நன்மையமைந்த வுள்ளத்தோடுஞ் சுற்றி வந்திருக்கின்ற மந்திரிமாரொடு தந்திரிமார்சூழ-மந்திரிகளுடன் சேனாதிபதிகளும் சூழ; தெற்றென வந்து திரண்டு-விரைந்து வந்து கூடி; முரண்டரு சீர்நாடு பெற்றது செல்வமென-காவலையுடைய நிலையுள்ள இவ்வுலகமானது செல்வத்தைப் பெற்றதென்று; தனி யோகை பெருத்தார்கள்-பேரானந்த வாழ்வடைந்தார்கள். (எ-று).

மற்று-அசை.

பாடினர் தும்புரு நாரதர் நீடிசை பாடாநின்
ருடினர் வானி லரம்பைய ரஞ்சலி யெஞ்சாமற்
சூடினர் மண்ணின்ம டந்தைய ரெந்தை துணைப்பாதந்
தேடினர் மாலய னன்பர்ந டந்தரி சித்தார்கள். 72

(இ-ள்): தும்புருநாரதர் பாடினர்-தும்புருநாரதர் கானம்பாடினார்கள்; வானிலரம்பையர் நீடிசைபாடா நின்ருடினர்-விண்ணில் அரம்பையர் கள் மிக்க இசைபாடிக்கொண்டு ஆடினார்கள்; மண்ணில் மடந்தைய ரெஞ்சாமலஞ்சலி சூடினர்-நிலவுலகத்தின்கண் வாழும் மகளிர்கள் குறைபாடின்றிக் கரங்களைச் சிரசின்மேற்குவித்துத் தொழுதார்கள்; எந்தை துணைப்பாத மாலயன்றேடினர்-எமது தந்தையாகிய நடேசப் பிரான் திருவடிகளிரண்டையும் திருமாலும் பிரமனும் முன் அறியாது மயங்கினர்; அன்பர் நடந்தரிசித்தார்கள்-இப்போது அடியார்கள் எளிதாக ஆனந்த நிருத்தத்தைத் தரிசனஞ் செய்தார்கள். (எ-று).

திருமால், பிரமன் என்னும் இருவரும் முன் திருவருளின்மையால் காணாது மயங்கினரென்றும், அடியார்கள் திருவருளுடைமையால் கண்டு தரிசித்தனரென்றுங் கொள்க.

சங்கொடு பேரிக றங்கிசை வீணைத னித்தாளம்
வங்கிய காளமி டக்கைக டக்கைம ணிக்காளம்
பொங்கிய பம்பைவ லம்புரி கண்டைமு தற்பொற்பார்
மங்கல தூரிய மெங்குமு ழங்கிவ னப்பெய்த 73

(இ-ள்): சங்கு பேரி கறங்கிசை வீணை-சங்குகள் பேரிகைகள் சத்திக்கா நின்ற இசையையுடைய வீணைகள்; தனித்தாளம்-ஒப்பற்றதாளங்கள்; வங்கிய காள மிடக்கைகள்-வேய்ங்குழல்கள் எக்காளங்கள் உடுக்கு கள்; தக்கை மணிக்காளம்-தக்கைகள் அழகிய திருச்சின்னங்கள்; பொங்கிய பம்பை வலம்புரி கண்டை முதல்-ஒலிக்கா நின்ற பம்பைகள் வலம்புரிச்சங்கங்கள் கைம்மணிகள் இவை முதலாகிய; பொற்பார் மங்கல தூரியம்-அழகு நிறைந்த மங்கல வாத்தியங்கள்; எங்கு முழங்கி வனப்பெய்த-எங்கும் சத்தித்துச் சிறப்பெய்தவும். (எ-று). ஒடு-இசைநிறை.

வேதியர் வேள்விநெ டும்புகை யாலய மெங்கெங்குங்
காதிய குங்குலி யப்புகை நீடுக ருப்பாலைச்
சோதிநெ டும்புகை தோரண வீதிதொ றுந்தோறு
மாதர்பு கைக்கும கிற்புகை யெங்கும்வ னப்பெய்த. 74

(இ-ள்): வேதியர் வேள்வி நெடும்புகை-மறையவர்கள் புரிகின்ற யாகத்திலுண்டாகிற மிகுந்த புகையும்; ஆலய மெங்கெங்குங் காதிய குங்குலியப்புகை-தேவாலயங்கள்தோறும் அடியவர்களிடும் பொடி செய்த குங்குலியப் புகையும்; நீடு கருப்பாலைச் சோதி நெடும்புகை-நீண்ட கரும்பின் சாற்றைக் காய்ச்சுதலாலுண்டாகின்ற ஒளி மிகுந்த

புகையும்; தோரண வீதிதொறுந்தோறும்-தோரணங்கள் கட்டிய வீதிகள்தோறும்; மாதர் புகைக்கு மகிற்புகை-மாதர்கள் ஊட்டுகின்ற அகிற்புகையும்; எங்கும் வனப்பெய்த-எங்கும் பரிமளிக்கவும். (எ-று).

ஆடக நாடக சாலேகண் முத்தணி யத்தாணி
மேடைய ரங்குக ளங்கமி லாதவெ ளிக்கூட
மாடம திட்கன மாளிகை சூளிகை யெங்கெங்குந்
தோடவிழ் மாலேகள் பொன்னரி மாலேகள் சூழ்வித்தார். 75

(இ-ள்): ஆடக நாடக சாலேகள்-பொன்னுலாகிய நாடக சாலேகளிலும்; முத்தணி யத்தாணி-முத்துக்களால் அலங்கரித்திருக்கும் பெரிய மண்டபங்களிலும்; மேடையரங்கு-மேடைகளிலும் சபைகளிலும்; களங்கமிலாத வெளிக்கூடம்-குற்றமில்லாத நிலா முற்றங்களிலும்; மாடமதிட்கன மாளிகை சூளிகை-வீடுகளிலும் மதில்களேயுடைய பெரிய மாளிகைகளிலும் அவற்றின் சிகரங்களிலும்; எங்கெங்கும்-மற்ற எல்லாவிடங்களிலும்; தோடவிழ் மாலேகள்-இதழ்களுடன் மலர்ந்த மலர் மாலேகளேயும்; பொன்னரி மாலேகள் சூழ்வித்தார்-பொன்னரி மாலேகளேயும் அலங்காரஞ் செய்தார்கள். (எ-று).

இம்மூன்றுங் குளகம்.

பொன்னரி மாலே-பொன்னே மலரிதழ் போலரிந்து தொடுத்த மாலே.

பழுதகல த்திரு வலகுவி ருப்பொடு பணிமாறிக்
குழைவுபெ றத்திகழ் கோமய நீர்குளி ரச்செய்து
தழைபொதி தோரண முங்கொடி யுந்துகி லுஞ்சார்வித்
தழகு பெறத்திரு வீதி புதுக்கி யதன்பின்பு. 76

(இ-ள்): பழுதகல விருப்பொடு திருவலகு பணிமாறி-குற்ற நீங்க விருப்பத்துடனே திருவலகிட்டு; குழைவுபெறத் திகழ் கோமய நீர் குளிரச் செய்து-குழம்பாக விளங்குகின்ற கோமயங் கரைத்த நீரைத் தெளித்து; தழைபொதி தோரணமுங் கொடியுந்துகிலுஞ் சார்வித்து-தழைநெருங்கிய மலர்த் தோரணங்களும் கொடிகளும் மேல்விதானங்களும் அலங்கரித்து; அழகுபெறத் திருவீதி புதுக்கியதன்பின்பு-அழகு பொருந்திய வீதிகளே அலங்காரஞ் செய்து அதன் பின்பு. (எ-று).

வேறு

திருநெ றித்தமிழ் வல்லபேர்கள்சி வாகமங்கள்ப டித்தபேர்
கருநெ றிப்பகை ஞான நூல்பல கற்றபேர் மறை கற்றபேர்
குருநெ றிக்குரி யோரிலக்கண லக்கியங்கள்கு றித்தபேர்
பெருநெ றிப்பல காவியங்கதை பேசவல்லவ ரனேவரும். 77

(இ-ள்): திருநெறித் தமிழ் வல்லபேர்கள்-தேவாரத் திருமுறைகளில் வல்லவர்களும்; சிவாகமங்கள் படித்தபேர்-சிவாகமங்களே ஓதியுணர்ந்தவர்களும்; கருநெறிப் பகை ஞான நூல் பலகற்றபேர்-பிறவிவரும் வழிக்குப் பகையாகிய பல ஞான நூல்களேக் கற்றுணர்ந்தவர்களும்; மறைகற்ற பேர்-வேத வித்துக்களாகிய மறையவர்களும்; குருநெறிக் குரியோர்-குரு உபதேசிக்கும் பாரம்பரிய நெறியில் நிற்பவர்களும்; இலக்கணலக்கியங்கள் குறித்தபேர்-இலக்கண இலக்கியங்களேக் கற்றவர்களும்; பெருநெறிப் பல காவியங்கதை-நன்னெறியை யுடைய பல காப்பியங்களேயும் புராணங்களேயும்; பேச வல்லவரனேவரும்-எடுத்துச் சொல்ல வல்லவர்களும் ஆகிய இவர்களெல்லாரும். (எ-று).

வேறு

வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றின்
மறையவர்கோ மயசலத்தான் மெழுகித் தாபித்
தெள்ளரும்வெண் சுதையொழுக்கி யறுகாற் பீட
மிட்டதன்மேற் பசும்பட்டு விரித்துமீதே
வெள்ளைமடித் திட்டுமது மலருந் தூவி
விரைநறுந்தூ பங்கொடுத்தா தனங்கற் பித்துத்
தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் புராணஞ்செய்த
திருமுறையை யதன்மேல்வைத் திறைஞ்சிப் போற்றி. 78

(இ-ள்): வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றில்-நடேசப் பிரான் நடனஞ் செய்கின்ற சிற்சபைக்கு முன்னே; மறையவர் கோமய சலத்தான் மெழுகித் தாபித்து-தில்லைவாழந்தணர்கள் கோமயங் கரைத்த நீரால் திருமெழுக்கிட்டு; எள்ளரும் வெண்சுதை யொழுக்கி-அழகான கோலமிட்டு; அறுகாற் பீடமிட்டு-ஆறுகாற் பீடமைத்து; அதன்மேற் பசும்பட்டு விரித்து-அதன்மேல் மிருதுவான பட்டை விரித்து; மீது வெள்ளை மடித்திட்டு-அதன் மீது வெண்பட்டு மடித்து, அலங்காரமாக வைத்து; மதுமலருந்தூவி-தேனிறைந்த மலர்களையும் பரப்பி; ஆதனங்கற்பித்து-இவ்வாருகப் பிரணவாசனம் பூசித்து; தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் செய்த-தெள்ளிய தமிழ்வல்ல சேக்கிழார் நாயனுர் திருவாய் மலர்ந்தருளிய; புராணத்திருமுறையை-திருத் தொண்டர் புராணத் திருமுறையை; அதன்மேல் வைத்து-அதன்மேல் வைத்து அருச்சித்து; விரைநறுந்தூபங் கொடுத்து-மணம் பொருந்திய நல்ல தூபதீபங் கொடுத்து; இறைஞ்சிப் போற்றி-வணங்கித் துதித்து. (எ-று). ஏ-அசை.

வாழிதிருத் தொண்டர்புராணத்தை நீரே
வாசித்துப் பொருளருளிச் செய்வீரென்று
சோழர்பெரு மான்முதலா மடியரெல்லாஞ்
சொலக்கேட்டுக் குன்றைமுனி மன்றுளாடுந்
தாழ்சடையா னடியெடுத்துத் தரத்தாஞ் செய்த
சைவகதை யினைவிளங்க விரித்துச் சொல்லச்
சூழவிருந் தம்பலவ ரடியா ரெல்லாஞ்
சுருதிமொழி யிதுவெனக்கை தொழுது கேட்டார். 79

(இ-ள்): திருத்தொண்டர் புராணத்தை-திருத்தொண்டர் புராணமாகிய இதை; நீரே வாசித்துப் பொருளருளிச் செய்வீரென்று-தேவரீரே வாசித்து இதன் பொருளை அருளிச் செய்வீராக என்று; சோழர் பெருமான் முதலாமடியரெல்லாஞ் சொலக்கேட்டு-அநபாய சோழன் முதலாகிய அடியவர்களெல்லாம் பிரார்த்திக்க அதை அங்கீகரித்து; குன்றைமுனி-சேக்கிழார் நாயனுர்; மன்றுளாடுந் தாழ்சடையான் அடியெடுத்துத் தர-சிற்சபையினிடத்து நடனஞ் செய்கின்ற தாழ்ந்த சடையையுடைய நடேசப்பிரான் முதலடியெடுத்துக் கொடுக்க; தாஞ் செய்த சைவ கதையினை-தாம் செய்த திருத்தொண்டர் புராணத்தை; விளங்க விரித்துச் சொல்ல-யாவருக்குந் தெரியும்படி விரிவாகப் பொருளருளிச் செய்ய; அம்பலவரடியாரெல்லாஞ் சூழ் விருந்து-நடேசப்பிரான் அடியார்களெல்லாம் சூழ்ந்திருந்து; இது சுருதி மொழியெனக் கைதொழுது கேட்டார்-இதுவே வேதவாக்கியமென்று அஞ்சலியாகக் கைகூப்பிச் சிரவணஞ் செய்தார்கள். (எ-று).

வாழி-அசை. இந்நான்கும் குளகம். (தொடரும்)

பெருமகன் (மஹாதேவன்)

இசைப்பேரரசி. சேலம் திருமதி எஸ். ஜெயலட்சுமி

(1) "உள்ளம்கவர் கள்வன்"

பக்தி என்னும் பெருங்கடலில் மூழ்குமுன் இறைவன் என்பதோர் தோணியைப் பற்றி மிதக்க வேண்டிய நாம், எங்கும் தோற்றமாகியும் தோற்றமில்லாதும் நிறைந்திருக்கும் அப் பரமனை உறவெனும் கோல் நட்டு உணர்வெனும் கயிற்றினல் முறுக வாங்கிக் கடைய வேண்டியவர் களாக இருக்கின்றோம். இறைவனுடன் முதலில் ஓர் உறவை நாட்டிக் கொண்டால் பின் சென்று அளவளாவுவது சாத்தியமாகும். சதாகால மும் சிவபெருமானின் சிந்தையே குடிகொண்ட நெஞ்சினராய் வாழ்ந்த நாயன்மார்கள், தங்களுடைய பெருவாழ்வின் மூலம் அவன் அடியார்க்கு எத்தனை எளியன் என்பதைப் பல சம்பவங்களின் மூலமாகத் தெள்ளத் தெளிய நிருபித்திருக்கிறார்கள். சிவஞானத்தின் கொழுந்தே போன்ற சம்பந்தசுவாமிகளின் 'பிள்ளைப் பெருமகன்' என்ற அரிய தன்மையையும் உறவையும் ஆராயப் புகுவோமாக. அரசனின் சகல பெருமைகளுக்கும் உரித்தான இளவரசைப் போன்று, இச்சிவக்கன்றும் ஆண்டவனின் அன்பையும் அருளையும் ஏகபோக உரிமையுடன் அனுபவிக்கின்றார். பால் மணம் மாருத குழவிப் பருவத்திலேயே உமாதேவியாரால் பிரமபுரத்தீசனின் ஆணைப்படி சிவஞானப்பால் ஊட்டப்பெற்ற பிள்ளைப் பெருமானர் முதலிலிருந்து கடைசி வரை சிவ சிந்தனையே சிந்தனையாய் உலகின் மாசு சிறிதேனும் தீண்டப்பெருதவராய் ஒப்பற்ற வாழ்வு வாழ்ந்தார்.

"வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூத பரம் பரை பொலிய" திருஞானசம்பந்தர் இவ்வுலகிலே அவதாரம் செய்தார் என்று சேக்கிழார் அருளிச் செய்துள்ளார். உலகிலே புதிய புதிய கருத்துக்கள், புதிய புதிய நவீன பொருட்கள் தோன்றுவது போன்று அந்தந்தக் காலத்தின் நாகரிகமாகக் கருதப்பட்டுக் கையாளப்படுவதைக் காண்கின்றோம். எத்தனை நவீனப் பொருட்கள் எவ்வளவு மலிந்த விலைக்குக் கிடைத்தாலும் காலத்தினல் பொன்னும் வெள்ளியும் தம் மதிப்பை ஒருக்காலும் இழப்பதில்லை. பொன்னை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டுபிடித்து விட்டார்கள். ஆனல் அதற்கு இன்று மதிப்பில்லை என்று கூறுவாருண்டோ? நாம் பொன்னை உடைத்தானவர்களாய் இல்லாமலும் இருக்கலாம்! அதனல் பொன்னின் மதிப்புக் குறையுமோ! ஒருநாளும் குறையாது. அதைப் போன்று குன்றாத பல உண்மைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் வேத நெறி தழைத்தோங்கவும் அதன் மிகு தத்துவங்கள் அனைத்தையும்

அடக்கிக் கொண்டுள்ளதுமான சைவத்துறை விளங்கவும் இப்பெருண்மைகளை வழிவழியாகக் காத்துத் தங்கள் உயிரினும் மேலாக ஓம்பி வரும் மெய்யடியார்களது பரம்பரை என்னும் பெருமை ஓங்கவும், அவ்வப்போது ஆண்டவன் தக்க அருளாளர்களைச் சமயாச்சாரியர்களாக அவதரித் தருளும்படி உலகிற்கு அனுப்பி வைக்கின்றான்.

திருஞானசம்பந்தர் அவதரித்த காலத்திலே எங்கும் எதிலும் உண்மையும் புனிதமும் நிறைந்த சைவம் குறைந்து சமண-பௌத்த மதங்களின் செல்வாக்கு நிறைந்திருந்தது. சமணமும் பௌத்தமும் ஒரு கண்டன மதமாக, இந்துக்கள் யாகம், யக்ஞம் என்ற பெயரில் பெருமளவுக்கு உயிர்ப்பலிகளைச் செய்துகொண்டிருந்த காலத்திலே ஏற்பட்டவை. கொல்லா நெறிக் கொள்கையைச் சிறப்பாகப் பரப்ப வந்த அக்கண்டன மதங்கள், இந்து சமயத்தில் ஏற்பட்ட அக்குறை நீங்கிய உடனே தங்களுடைய முக்கியத்துவத்தையும் இழந்தன. "அன்பே சிவம்" என்னும் கோட்பாடு இந்து சமயத்தின் உயிர் நாடி. ஆகவே இடைக்காலத்தில் தோன்றிய இம்மதங்கள் தனியாக இயங்கக் கூடிய ஆற்றல் இல்லாது போயிற்று. ஆலமரம் போன்று வளர்ந்து ஓங்கியுள்ள இந்துசமயம்தான் தன்னுள் அனைத்தையும் அடக்கிக் கொண்டுள்ளதே! ஒரு மதத்தை உண்டாக்கியவர் எத்தகைய அருளாளராயிருந்தாலும் காலப்போக்கில் அம்மதம் வலிமைகுன்றி விடும் என்பது உலக வழக்கு. மதமானது தனிநபரின் செல்வாக்கினாலும் அருள் தன்மையினாலும் மட்டுமின்றிக் கொள்கையின் உயர்வினாலும் தனித்தன்மையாலும் தான் ஒளி வீச வேண்டும். ஆகவே தனித்தன்மை எதுவுமற்ற சமணமும் பௌத்தமும் இந்து மதத்தின் அங்கங்களாக ஒன்றி விட்டன. மேலும் துறவுநெறி ஒன்றை மட்டுமே போதித்த அம் மதங்கள் மக்களிடையே நிலைத்த ஓரிடத்தைப் பெறவும் தவறிவிட்டன.

சுயநலம் கொண்ட சிலர் எங்கும் காணப்படுவதுபோல் சமண-பௌத்த சந்நியாசிகள், காலப்போக்கில் மக்களிடையே தங்கள் செல்வாக்குக் குறைந்து விட்டதன் காரணமாக அரசர்களை அணுகி அவர்களைத் தங்கள் வசமாக்கி அரசியல் துணைகொண்டு மக்களைத் துன்புறுத்தத் துணிந்தார்கள். அரசியல் ஊழலில் மதத்தின் ஊழலும் புகுந்தால் பின்னர்க் கேட்க வேண்டுமா! சமயம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது. பாரத நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்தால் பல அரசியல் குழப்பங்களிலிருந்து நம்முடைய இந்து சமயம் எப்படித் தப்பிப் பிழைத்து வந்திருக்கிறது என்பது விளங்கும். அதற்குக் காரணம் இந்து மதத்தின் பரந்த நோக்கங்களும் தெளிவான கொள்கைகளுமே ஆகும்.

சிதைவுற்றிருந்த சமண-பௌத்த மதங்களை விலக்கி மெய்ந்நெறி பரப்பி ஆன்மாக்களை நற்கதியடைவிக்கத்தக்க காலத்திலே திருஞானசம்பந்தர் தோன்றினார். இவர் பேருண்மையை விளக்க வந்த ஒப்பில்லாத அருள்ஞானி. சிறு சிறு மதப்பூசல்களும் கண்டனங்களும்

இவர்கள் கொள்கையல்ல. தென்னகத்தின் இரு கண்களாகிய சைவமும் வைணவமும் உலகின் நடைமுறையை ஒட்டியதாகவும், மக்கள் அனைவரும் கடைப்பிடிக்கக் கூடியதாகவும் தனி ஒருவன் செம்மையாகக் கடைப்பிடித்து வாழத்தக்க முறையிலும் அமைந்துள்ளன. நாட்டின் நலமும் சமூகத்தின் உயர்வும் தனிப்பட்டவர்களின் சுகமும் ஒருங்கே அதன்கண் அமைந்து கிடக்கின்றன. ஆகவே மேலாம் இச்சமயங்களை எக்காலத்திலும் எங்கும் அழிப்பதென்பது ஒருபோதும் நடவாத செயல். பொன் எப்படி எக்காலத்திலும் சிறந்து விளங்குகிறதோ அதேபோன்று இந்து சமயம் என்றும் சிறந்தே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

சோழநாட்டிலே சீகாழி, பாடல்பெற்ற தலங்களிலே சிறந்த ஒன்று. அதற்குப் பிரமபுரம், வேணுபுரம் என்று மற்றும் பன்னிரண்டு திருப்பெயர்கள் உள்ளன. யுக முடிவில் அகிலாண்டங்களும் பேருழியில் மூழ்கும் போது இத்தலம் மட்டும் தோணியாக மிதந்து நின்றது என்பது புராண வரலாறு. அதனல் இதற்குத் தோணிபுரம் என்ற பெயரும் உண்டாயிற்று.

திருஞானசம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றுண்டிலே திருஅவதாரம் செய்தார். அவருடைய தகப்பனுரான சிவபாதவிருதயர் என்பார் பெயருக்கேற்பப் பெரும் சிவபக்தர். அன்னையாரான பகவதி அம்மையாரோ, கற்பிற் சிறந்த உத்தமி. அக்காலத்தில் சமண, பௌத்த மதங்களின் ஆதிக்கம் பெருகிச் சைவமாகிய மெய்ந்நெறி மக்களிடையே ஒளிகுன்றி, விளக்கமின்றி இருத்தலைக் கண்டு மனம் வருந்தி, பொய்மை நிறைந்த இதர சமயங்கள் அழிந்துபடவும் சைவம் தழைத்தோங்கவும் வேண்டித் தோணியப்பரையும் பெரியநாயகி அம்மையாரையும் குறித்துத் தமக்கு ஒரு சத்புத்திரரைக் கொடுத்தருள வேண்டுமென, சிவபாத விருதயர் பெரும் தவமியற்றினர். அவ்வப்போது புண்ணியம் குன்றி, பாவம் தலைதூக்கும் பொழுதெல்லாம் இறைவன் அருளாளர்களை அனுப்பி, உலகை உய்வித்து வருவது இறைவன் செயலல்லவோ ?

சிவபாதவிருதயரின் தவத்திற்கிரங்கியும் உலகெலாம் உய்வடையும் பொருட்டும் சிவபெருமான் திருஞானசம்பந்தரை இத்தமிழ் மண்ணிலே பிறக்குமாறு அருளிச் செய்தார். ஒரு வினையும் செய்தறியாத பிள்ளைப் பெருமான், "திருந்தடி-மறக்குமாறிலாத என்னை மையல் செய்திம் மண்ணின் மேல்-பிறக்குமாறு காட்டினுய்," என்று திருத்துருத்திப் பதிகத்திலே, தமது குற்றமில்லாத தன்மையைக் கூறி அருளியிருக்கிருர். சார்வாகப் பட்சி என்னும் ஒரு பறவை ஆகாயத்திலேயே முட்டையிட, அம்முட்டை பூமியை நோக்கிக் கீழே வர, முட்டை நிலத்தைத் தொடுவதற்கு முன்னரே வெடித்து அப்பறவை அப்படியே மேலே பறந்து விண்ணை நோக்கி விரையுமாம்.

(தொடரும்)

சமயபோதனை

பாடம் 7 விஞக்கள் அக்டோபர் 1974.

விஞக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-10-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. வள்ளலார்க்கு "ஒருவரே கடவுள்" என்னும் உறுதியுண்டு என்னும் வாய்மையை விளக்குக.
2. "உத்தரகோசமங்கை" பெயர்க் காரணம் பற்றி விளக்குக.
3. "ஒன்பது தந்திரங்கள்"-சிறுகுறிப்பு வரைக.
4. "அப்பனுக்குச் சங்காழி அளித்துகந்த பெருமான்"-விளக்குக.
5. வாழ்க்கை வளர, இன்பமுற வாழ வள்ளுவரிடும் ஆணையை விளக்குக.
6. 'பத்திகாச்சிரமத்தில்' இராமாநுசர் என்னென்ன மாற்றங்கள் செய்தார்?
7. "பரிபூரணனுக்கு அடிமையாதல்-பணிசெய்தல்" இது யாருடைய நெறி? விளக்குக.
8. சேக்கிழார்பெருமான் "திருத்தொண்டர் மாக்கதை" அரங்கேற்றம் செய்த நிகழ்ச்சியை விவரிக்க.
9. "வாழ்வை வளர்க்காத, வாழ்வுக்குப் பயன்தராத கொள்கைவழிச் செல்லுதல் பயனற்றது" விளக்குக.
10. "துன்ப நீக்கத்திற்குரிய வழி" என்ன?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்:—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

புனித நெறி

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்க்கை, அறிவுடையது; பொருளுடையது; இலட்சியங்களுடையது; நெறிகளுடையது என்பது திருஞானசம்பந்தர் கொள்கை. வாழ்க்கை, துன்பத்தொடக்குண்டு கிடககிறது. இந்தத் துன்பத் தொடக்கிலிருந்து விலகி, இன்பியல் வாழ்க்கைக்கு மனிதன் செல்லவேண்டும். அங்ஙனம் துன்பத்தை இன்பமாக மாற்றியமைக்க வேண்டுமானல். தெளிவான அறிவு தேவை. தெளிவான அறிவும் உணர்வும் இன்றி எந்த முயற்சி யெடுத்தாலும் கைகூடாது; பயனும் கிடைக்காது.

மனிதனுக்கு அறியாமையைவிடக் கொடிய பகை வேறு இல்லை. மயக்கத்தைவிடத் தீமை தருவது வேறு எதுவும் இல்லை. அதுவும், அறியாமையை அறிவு என்று கருதி—நம்பி மயங்கும் மயக்கம் மிகவும் கொடுமையானது. இன்றையச் சமுதாயத்தில் அறியாமையை அறிவு என்று நம்பி, தன்முனைப்புடன் தலைதடுமாறித் திரிபவர்கள் பலர். அவர்களின் பேதமை இரங்கத்தக்கது. எதுபோல? நல்ல வெட்ட வெளியில் வெய்யில் எரிக்கும்பொழுது தொலைவில் நின்று பார்த்தால் தண்ணீர் அலைகள் பாய்ந்து செல்வதுபோல ஒரு காட்சி தெரியும். அதனை இலக்கிய நூலார், "பேய்த்தேர்" என்று கூறுவர். இந்தப் பேய்த் தேரை, தண்ணீர் வேட்கையெடுத்த ஒருவன் தண்ணீர் வெள்ளம் என்று கருதிக் குடத்தினை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக்கச் சென்ருல், அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது! பரிகாசத்துக்குரியது! அவனுக்குத் தண்ணீரும் கிடைக்காது; தாகமும் தணியாது. மேலும், பயன்படா முயற்சியில் ஈடுபட்டதால் ஆற்றலும் வீணுக்கப்பட்டது. அதுபோல் வாழ்வை வளர்க்காத வாழ்வுக்குப் பயன் தராத கொள்கைவழிச் செல்லுதல் பயனற்றது.

கடவுள் உண்டு என்று நம்பி, கடவுளை எங்கும் எல்லாவற்றிலும் கண்டு, இதயக்கனிவுடன் ஏத்தி விழிபடுதல் உய்யும்நெறி; இன்ப நெறி. அதனை விடுத்து அறிவு என்ற பெயரில் அறியாமைபேசிச் சழக்கு களுக்குக் காரணமாகிய சாத்திரம் பேசி மயங்கி மையல் வலைப்படுதல் பாழ்நெறியாம். இப்போக்கு இம்மையிலும் துன்பம்தரும். ஆதலால். வல்லாளர்க்கு வல்லாளனுக விளங்கி வாழ்வளிக்கும் இறைவனை-திருப் பருப்பதத்தில் எழுந்தருளியுள்ள பரமனைப் போற்றி வழிபடுவதே புனிதநெறி.

"சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண் குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினன் பருப்பதம் பரவுதுமே"

1—118-10.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

கலைமகள் வாழ்த்து

கலைபயின்ற உளத்தினிக்குங் கரும்பினை முக்
கனியை அருட் கடலை ஓங்கும்
நிலைபயின்ற முனிவரரும் தொழுதேத்த
நான்முகனார் நீண்ட நாவின்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகும்
காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி
அம்மையை நாம் சிந்திப்போமே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.